பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 16 சனிக்கிழமை 30.03.2019 கதிர் 146

### இது ரகசியம் அல்ல!

எங்களின் எம்.பிமார் 'கொம்பரமைஸ்' பண்ணாமல் முழு மூச்சாக இப்போது செயற்படுத்துகின்ற விடயம் என்னவென்று கேட்டால் அரசியல் அரிச்சுவடி பாடம் தன்னும் படிக்காதவர் கூட அது 'கம்பரெலியத்' திட்டம் என்று சொல்லி விடுவர்.

அதில் முழு பக்கம் 02 >>>



# நீதியரசர் பகவதி தலைமையிலான சுயாதீனக் குழுவை உதாரணமாகக் கொண்டு கலப்பு நீதிமன்று நிறுவலாம்

## முன்னாள் முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரன் யோசனை

யாழ்ப்பாணம், மார்ச் 30

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்த நீதியரசர் பகவதி தலைமையிலான சர்வதேச சுயாதீனக் குழுவை உதாரணமாக கொண்டு கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படமுடியும் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். பக்கம் 02 >>>

# சரத் பொன்சேகாவும் போர்க்குற்றவாளியே

## விசாரணை நடத்துவதற்கு அவர் தயாரா எனச் சவால் விடுக்கின்றார் கஜேந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 30

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் ஒரு போர்க் குற்றவாளி தான். ஆனால் இன்று அவர் தன்னைப் பரிசுத்தமானவராகக் காட்டுவதற்கு முயல்கிறார் எனக் கூறியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், உண்மையில் போர்க்குற்றங்கள் என்ற கோணத்தில் விசாரணை நடத்துவதற்குப் பொன்சேகா தயாரா என்றும் கேள்வியெழுப்பினார். பக்கம் 11 >>>



## மின்சாரத் தடை திட்டமிட்ட சதி!

### மஹிந்த அணி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 30

மின்வெட்டு திட்டமிடப்பட்ட வகையில் செய்யப்பட்ட சூழ்ச்சி என மஹிந்த அணி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த வருடத்துக்கான வரவு – செலவுத் திட்டத்தின் நெடுஞ் பக்கம் 11 >>>

## இராணுவப் பாதுகாப்புடன் வடக்கு பௌத்த மாநாடு!

வவுனியா, மார்ச் 30

வடக்கு மாகாணத்தில் மத நல்லிணக்க மேம்பாட்டுக்கான பௌத்த மாநாடு நேற்று வவுனியா கண்டிவீதியில் அமைந்துள்ள சிறி போதி தட்சிணா பக்கம் 11 >>>

## கடும் வெயிலால் வயோதிபர் நேற்று மயங்கி வீழ்ந்து சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 30

கரவெட்டிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வயோதிபர் கடும் வெயிலினால் பக்கம் 11 >>>

## தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்வனவு செய்ய முடிவு!

கொழும்பு, மார்ச் 30

மின்சார நெருக்கடியைத் தீர்க்கும் வகையில், தனியார் மின் நிலையங்களிலிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக் பக்கம் 11 >>>

## குற்றச்சாட்டுக்களின் தீவிரத்தை இலங்கை அரசு உணரவேண்டும்

### ஆஸ்திரேலியா வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 30

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் தீவிரத்தன்மையை இலங்கை புரிந்துக் கொள்ள வேண்டும் பக்கம் 11 >>>

## பந்துல குணவர்த்தன பதவி விலகவேண்டும்



### சுமந்திரன் எம்.பி. வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 30

நாடாளுமன்றத்தின் பொது நிதியக் குழுவில் இருந்து அதன் உறுப்பினரான பந்துல குணவர்த்தன பக்கம் 11 >>>

## கோட்டா ஜனாதிபதியானால் தமிழ் மக்களுக்கு பேராபத்து!

### எச்சரிக்கிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 30

தமிழ் மக்களுக்கு எதிரான அத்தனை கொடூரங்களையும் முன்னின்று வழிப்படுத் பக்கம் 11 >>>

## மஹிந்த - நிரூபமா திடீர்ச் சந்திப்பு முக்கிய விடயங்கள் பற்றி பேச்சு!



கொழும்பு, மார்ச் 30

இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறைச் செயலர் நிருபமா ராவ் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுக் காலை பக்கம் 02 >>>

## மாகாண சபைத் தேர்தல் ஜூலைக்குள் நடக்கும்!

### கிழக்கு ஆளுநர் தகவல்

கொழும்பு, மார்ச் 3

இவ்வருடம் ஜூலை மாதத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை பக்கம் 11 >>>

## நிதி ஒதுக்கீடுகள் தோல்வி; சபையில் பிரதமர் பதிலடி

கொழும்பு, மார்ச் 30

அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு நிறைவேற்றப்படாவிட் பக்கம் 11 >>>

## நீதிமன்ற உத்தரவில் தலையிடுவதா? விளக்கம் தர ஆளுநருக்கு நோட்டீஸ்!

### கிளிநொச்சி நீதிவான் மன்று விடுத்தது

கிளிநொச்சி, மார்ச் 30

நீதிமன்றம் உத்தரவு வழங்கிய ஒரு விவகாரத்தில் அதன் பின்னர் ஆளுநர் தலையிட்டார் என்று கூறப்படும் முறைப்பாடு நீதிமன்றத்தில் தெரிவிக் பக்கம் 11 >>>

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

காலைக்கதிர் Kalaikathir



## நீதியரசர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபையில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு மேலும் இரண்டு வருட காலம் வழங்கி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் 21.03.2019 அன்று உறுப்பு நாடுகள் இலங்கை அரசின் அனுசரணையுடன் 40/1 என்ற தீர்மானத்தினை நிறைவேற்றி இருப்பது தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கின்றது.

போர்க்குற்றம் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்புவதற்கும் எமது மக்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து இழைக்கப்படுவதற்குமே இந்தத் தீர்மானம் வழிவகுக்கப் போகின்றது.

இனப்படுகொலை புரிந்து எமது பெண்களை நூற்றுக்கணக்கில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய இராணுவத்தை தண்டனையில் இருந்து காப்பாற்றும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பிரேரணைக்குச் சார்பாக செயற்பட்டமையும் வேதனையை அளிக்கின்றது.

30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சுமார் 3 ஆண்டுகளுக்கும் மேல் கடந்துள்ள நிலையில் அதனை நிறைவேற்றுவதற்கான எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவோ அல்லது அவற்றை நிறைவேற்றவோ விருப்பம் எதனையும் வெளியிடாத இலங்கை அரசு மாறாக இந்த தீர்மானத்தின் முக்கிய பல விடயங்களை மீண்டும் மீண்டும் நிராகரித்தே வந்துள்ளது. வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்படவேண்டும் என்ற 30/1 தீர்மானத்தினை நிறைவேற்ற வலியுறுத்தும் 40/1 தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிக்கொண்டே கலப்பு நீதிமன்ற யோசனையை இலங்கை அரசு மனித உரிமைகள் சபையில் கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக நிராகரித்திருக்கின்றது.

இதுஎந்த அளவுக்கு இலங்கை அரசு 30/1 தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதையும் அதன் நேர்மைத்தன்மையையும் அதன் ஏமாற்று தந்திரத்தையும் வெளிச்சம்போட்டு காட்டுகின்றது.

ஐ.நாவுக்கு எழுத்து மூலம் கொடுத்த வாக்குறுதிகளையே அடுத்த நிமிடம் காற்றில் பறக்க விடும் இலங்கை அரசு கடந்த பலதசாப்த கால இனப்பிரச்சினையில் எத்தனை உடன்படிக்கைகளை உதாசீனம் செய்திருக்கும் என்பதனையும் இது எந்தளவுக்குத் தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையும் விரக்தியையும் கொடுத்திருக்கும் என்பதையும் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் ஓர் இனப்படுகொலை நடைபெற்றபோது அதனைத் தடுப்பதற்கு தவறி இருந்த ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவை போரின் பின்னர் பொறுப்புக்கூறல் மற்றும் நீதிச் செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான பெரும் கடப்பாட்டை கொண்டிருந்தன. ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் சபையினூடான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறையை அலட்சியமாகவும் விளையாட்டு போலவும் இலங்கை அரசு கையாளுவதற்குச் சர்வதேச சமூகம் இடமளித்திருப்பது இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறுவதற்கும் உலகில் ஒரு பிழையான முன்னுதாரணம் ஏற்படுவதற்குமே வழிவகுக்கப்போகின்றது.

இறுதிப் போரில் நடைபெற்ற போர்க்குற்றங்களானவை சர்வதேச சட்டங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு அமைவாக விசாரிக்கப்பட்டு காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால் உலகின் பலநாடுகளிலும் இன்று போர்க் குற்றங்கள் இடம்பெறாமல் சர்வதேச சமூகம் தவிர்த்திருந்திருக்கக்கூடும்.

ஆகவே, 40/1 பிரேரணையை நிறைவேற்றுவதற்கு அனுசரணை வழங்கிய அனைத்து நாடுகளும் 30/1 தீர்மானத்தை இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றுவதற்கு காத்திரமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கும் இந்த நாடுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். பொதுமக்களின் காணிகளில் இருந்து இராணுவம் விலகவேண்டும் என்று மூன்று வருடங்களுக்கு முற்பட்ட 30/1 தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், பொதுமக்களின் காணிகளில் இன்னமும் இராணுவம் நிலை கொண்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. நீக்குவதானால் அதனிலும் கொடிய ஒரு சட்டத்தை ஏற்ற பின்னரே முன்னையதை நீக்கலாம் என்று அரசு கூறி வருகின்றது.

இந்த அறிக்கையை நான் எழுதிக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

காணாமற்போன தமது உறவுகளைத் தேடி அவர்களது உறவினர்கள் இராணுவ முகாம்களுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் அலைந்து திரிந்து கொண்டிருக்கின்றார்கள். வீதிகளில் நின்று போராடுகின்றார்கள். ஆனால் பலன் ஏதும் கிடைப்பதாக இல்லை.

அதனால்தான் ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கைக்கான சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிக்கவேண்டும் என்றும் தனது நிரந்தர அலுவலகம் ஒன்றை வடக்கு கிழக்கில் நிறுவவேண்டும் என்றும் நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன். இதன் மூலம், வடக்கு கிழக்கில் தொடரும் மனித உரிமை மீறல்களை நிறுத்த முடிவதுடன் 30/1 தீர்மான விடயங்கள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்புச் செய்யவும் முடியும்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்தும் உறுப்புநாடுகள் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

அதேவேளை, போர்க்குற்றங்களை விசாரணை செய்ய வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை நிறுவுவதற்கு உடனடியாக உறுப்பு நாடுகள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இலங்கையின் அரசியலமைப்பின் பிரகாரம் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை அமைக்கமுடியாது என்ற அரசின் கூற்று பொருத்தமற்றது.

2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் 1ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் பி. என். பகவதி தலைமையில் 16 மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரணை செய்யும் உடலகம ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு அமைத்த முன்னணி நபர்களைக் கொண்ட சர்வதேச சுயாதீன குழுவை உதாரணமாக கொண்டு கலப்பு நீதிமன்றத்தை உருவாக்கலாம்.


வெளிநாட்டு நீதிபதிகளின் உள்ளடக்கம் எவ்வாறு மனித உரிமைகள் மீறல் பொறிமுறைகளில் சர்வதேச தராதரத்தையும் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நம்பகத்தன்மையையும் ஏற்படுத்தும் என்பதற்கு நீதியரசர் பகவதி குழு ஒரு சிறந்த உதாரணமாகும்.

அதேபோல, இலங்கை அரசின் உடலகம ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் சர்வதேச தராதரம் மற்றும் கோட்பாடுகளுக்கு அமையாமலும் வெளிப்படைத்தன்மை இன்றியும் நடைபெற்றது என்று கூறி ஆணைக் குழுவின் செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் கொடுப்பதை தவிர்க்கும்வகையில் ஒரு வருடத்தின் பின்னர் சர்வதேச சுயாதீன குழுவை நீதியரசர் பகவதி கலைத்தமையானது ஏன் உள்நாட்டு பொறிமுறை இலங்கைக்கு பொருத்தமற்றது என்பதற்கான ஒரு சிறந்த உதாரணமாகும்.

அப்போது காலஞ்சென்ற நீதியரசர் மார்க் பர்ணாண்டோவுடனும் என்னுடனும் இந்த சர்வதேச சுயாதீனக் குழுவானது கலந்து பேசி அறிவுரைகளையுப் பெற்றிருந்தது என்பதை இத்தருணத்தில் கூறி வைக்கின்றேன் – என்றுள்ளது. (ஐ)

# மட்டக்களப்பில் கோர விபத்து! தீப்பற்றின மோ.சைக்கிள்கள்!!

## 3 இளைஞர்கள் பலி; மூவர் காயம்!!



மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலை பிரதான வீதியில் நேற்றிரவு ஏற்பட்ட கோர விபத்தில் மூன்று இளைஞர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

வீதியில் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. இதன்போது இரு மோட்டார் சைக்கிள்களும் தீப்பற்றிக்கொண்டன. அதில் சிக்குண்டே மோட்டார் சைக்கிள்களில் பயணித்த மூவர் பலியாகியுள்ளனர்.

அதேவேளை, இந்த அனர்த்தத்தில் சிக்கி மேலும் மூன்று இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் மூவரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# முல்லைத்தீவு மாணவி சாதனை



முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி மாணவி ஜானுா கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் 9ஏ பெறுபேறு பெற்று சாதனை படைத்துள்ளார். சிறு வயதில் தந்தையை இழந்து பல துன்பங்களுக்கு மத்தியில் தாயின் அரவணைப்பில் வளர்ந்துவந்த அவர், பரீட்சையில் சாதனை படைத்து சக மாணவ மாணவிகளுக்கு ஒரு முன்னுதாரணமாக திகழ்கின்றார்.

மிகவும் கடினமான நிலையில் கல்வி கற்று சாதித்துள்ள மாணவி ஜானுாவின் சாதனை பலராலும் பாராட்டப்படுகிறது.

கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகின. அதன் அடிப்படையில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் 9,413 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூச்சாக இருக்கின்றார்கள் நம் எம்.பிமார். அந்த விடயத்தில் எம்.பிமாருக்கு ஒரு 'ஸேம் சைட்' கோல் அடிக்கும் கைங்கரியத்தைப் பண்ணியிருக்கின்றார் நமது வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

அரசு ஒதுக்குகின்ற நிதியைத் தாங்கள் முன்னின்று – தங்கள் ஒதுக் கீடாகக் காட்டி, 'கிரடிட்' பெற்றுக் கொள்வதுதானே இந்த விவகாரத்தின் உள் சூத்திரம்?

ஒரு வீதியை அமைத்தாலோ, அல்லது ஒரு கட்டடத்தைத் திருத்தினாலோ, அல்லது அது போன்ற ஒரு வேலையைச் செய்தாலோ அந்த இடத்தில் அது பற்றிய ஒரு விளம்பரப்பலகையை நாட்டித் தங்கள் பெயரையும் பொறித்து விடுவதில் நமது எம். பிக்களுக்கு நப்பாசை அதிகம்.

அந்தப் பெயர்ப் பலகையில் ஜனாதிபதி, பிரதமர், சம்பந்தப்பட்ட விடய அமைச்சர், சில சமயங்களில் சம்பந்தப்பட்ட பிரதி அமைச்சர்கள் ஆகியோருடன், குறிப்பிட்ட எம்.பியின் பெயரும் படமும் நான்காவது அல்லது ஐந்தாவதாக இருக்கும்.

இந்தப் பெயர்ப்பலகை விவகாரத்தில்தான் சத்தம் சந்தடியில்லாமல் ஒரு குழப்பத்துக்கு நைஸாகத் திரி வைத்திருக்கின்றார் சிவஞானத்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அடுத்த 8 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது. அதையொட்டி யாழ். மாவட்ட அரச அதிபருக்கு எழுதிய கடிதத்தில் இது பற்றி அவர் குறிப்பிட்டிருக்கின்றார். அதைப் பார்ப்போமா?

*"தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் அமுல் செய்யப்படும் கம்பெரலிய திட்டங்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீட்டின் கீழ் நிறைவேற்றப் படும் திட்டங்கள் தொடர்பாக அந்தந்த இடங்களில் ஜனாதிபதி, பிரதம மந்திரி, விடய அமைச்சர் மற்றும் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரது பெயர் மற்றும் புகைப்படங்களை கொண்ட விளம்பரங்கள் பொருத்தப்படுகின்றன என அறியப்படுகின்றது.*

*"இந்த விளம்பரப் பலகைக்கான செலவு அந்தந்தத் திட்ட செலவுக்குள்ளேயே மேற் கொள்ளப்படுவதாகவும் அறியப்படுகின்றது . எனவே பயனாளிகளுக்கு சென்றடைய வேண்டிய ஒரு பகுதி நிதி இவர்களது சுயவிளம்பரத்துக்காக மக்கள் பணம் வீண்விரயம் செய்யப்படுகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.*

*"உதாரணமாக ஒரு விளையாட்டுக்கழகத்துக்கு முப்பதாயிரம் ரூபா (ரூபா 30,000/=) ஒதுக்கிடும் போது அதில் ஏழாயிரம் ரூபா (7,000/=) வரை இந்த விளம்பரத்துக்காக ஒதுக்கிக் கொண்டு மிகுதி இருபத்தி மூன்றாயிரம் ரூபாவே (23,000/=) பயனாளிக் கழகத்தைச் சென்றடைகிறது.*

*"இது ஒரு பொது நிதி முறைகேடாகப் பார்க்கப்படல் வேண்டும்.*

*"அப்படியான ஒரு கருத்தை அரசாங்கத்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் தெரிவித்தமை கவனிக்கப்படல் வேண்டும்.*

*"எனவே இந்த பொது நிதி விரயத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அமுலாக்கல் அமைப்புக்களான பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் தவிர்த்தல் வேண்டும் என்ற முன்மொழிவு எதிர்வரும் 08.04.2019 ஆம் திகதி நடைபெறும் மாவட்ட ஒருங் கிணைப் புக் குழுக் கூட்டத்தில் பரிசீலிக்கப் பட்ட வேண்டும் எனக் கோரப்படுகின்றது."*

– இப்படி சிவஞானம் கோரியுள்ளார்.

கம்பரெலியத் திட்டத்தில் எம்.பிமார் துடித்துக் கொண்டு முழு மூச்சாக ஈடுபடுகின்றமையே அதில் சுயவிளம்பரம் தேடத்தானே...!

அதுக்கு ஆப்பு வைக்க முயல்கிறார் வடக்கு மாகாண அவைத் தலைவர். எம்.பிமாரிட்டை வாங்கிக் கட்டிக் கொள்ளப் போகிறார் என்பது மட்டும் நிச்சயம்...

- மின்னல் -

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் சந்தித்துப் பேசியுள்ளார்.

இரு நாட்டு அரசியல் மற்றும் இதர பல விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடினர் எனத் தெரிகின்றது.

குறிப்பாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் குறித்து நிரூபமா ராவ் வினவினார் என்றும், அந்த விடயம் குறித்து இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கவில்லையென மஹிந்த ராஜபக்ஷ இதன் போது கூறினார் என்றும் தெரியவருகின்றது.

சார்க் பிராந்தியத்தில் செயற்படும் வகையில் கலை – கலாசார அமைப்பொன்றை நிறுவியிருக்கும் நிரூபமாராவ் அது தொடர்பில் மஹிந்தவிடம் தெளிவுபடுத்தினாரென்றும் அறியமுடிந்தது. பேராசிரியர் ஜீ எல் பீரிஸ், திருமதி கதிர்காமர், நிரூபமாவின் கணவர் சுதாகர் ராவ் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ)

# முதலமைச்சரை சிறையில் அடைத்தார் மைத்திரிபால!



கொழும்பு, மார்ச் 30

கொஸ்கம பொலிஸ் நிலையத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்கிருந்த பொலிஸ் கூண்டுக்குள் செல்லுமாறு மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரியவைப் பணித்தார். முதலமைச்சர் உள்ளே சென்ற பின்னர் சிறைக் கூண்டை மூடினார் ஜனாதிபதி.

பகிடியாக ஜனாதிபதி செய்த இந்தச் செயல் அந்த நிகழ்வில் கலந்து கொண்டோரிடையே சிரிப்பலைகளை ஏற்படுத்தியது. (ஐ)

## 527 மாணவரின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 30

2018ஆம் ஆண்டுக்கான, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய 527 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதரசாதாரணதரப்பரீட்சை தொடர்பில், 1,315 முறைப்பாடுகள்கிடைக்கப் பெற்றிருந்தன என்றும், அவற்றுள் 738 முறைப்பாடுகளின் விசாரணைகள் நிறைவுப்பெற்றுள்ளனஎன்றும், பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.(ஐ)

# வடக்கில் மின் வாசிப்பாளர்களாக தமிழர்களையே நியமிக்கவேண்டும்

## சிறிதரன் எம்.பி. சபையில் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 30

வடக்கில் மின் வாசிப்பாளர்களாகத் தமிழ் பேசுபவர்களை நியமிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் கருத்து வெளியிட்டபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கில் தற்போது சிங்கள மொழி பேசக்கூடியவர்கள் அல்லது தமிழ் மொழி தெரியாதவர்களே மின் வாசிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே இதுகுறித்து அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும் – என்றார். (ஐ)

## நாளொன்றுக்கு 8 பேர் விபத்துகளால் மரணம்

கொழும்பு, மார்ச் 30

வாகன விபத்து காரணமாக நாளொன்றுக்குச் சுமார் 08 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர இதனைத் தெரிவித்தார்.

பல வீதி விபத்துக்களுக்குச் சாரதிகள் போன்றே பாதசாரிகளும் பொறுப்பேற்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வீதி விபத்துக்களில் உயிரிழப்போரில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கள் ஓட்டிகளும், அதில் செல்வோருமே என அவர் தெரிவித்தார். (ஐ)

## இரு யானைத் தந்தங்களுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, மார்ச் 30

வவுனியா ஓமந்தை பகுதியில் இரண்டு யானைத் தந்தங்களை உடைமையில் வைத்திருந்த ஒருவரை மாங்குளம் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

வவுனியா வனஜீவராசிகள் திணைக்களத்தினர் இதனை தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் யானை தந்தங்களை ஒருவர் கைவசம் வைத்திருக்கிறார் என விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஓமந்தை பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இரண்டு தந்தங்கள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட தந்தங்கள் வவுனியா மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவற்றை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் நெல்வேலிகுளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 இல் ஓ.எல். சித்தி வீதத்தில் சரிவு!

கொழும்பு, மார்ச் 30

2017ஆம் ஆண்டின் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேற்றுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டு பரீட்சை பெறுபேறுகளில் வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது.

அதனடிப்படையில் 2017ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 67.24 சதவீத மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளனர். எனினும் கடந்த ஆண்டு 64.11 சித்தியடைந்துள்ளனர் எனப் பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

2017ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 9 ஆயிரத்து 960 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலுமே (9) ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். எனினும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அதிகரித்த போதும் 9 ஆயிரத்து 413 பேர் மட்டுமே 9 பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

மேலும் 2017ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியோரில் 73.05 சதவீத மாணவர்கள் க.பொ.த உயர் தரத்தில் கல்வி பயில்வதற்குத் தகுதி பெற்றனர். எனினும் கடந்த ஆண்டு 71.66 சதவீதமானோரே உயர் தரத்தைத் தொடர்வதற்கான சித்தியைப் பெற்றுள்ளனர் என்றும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)



# இராணுவத் தளபதியை சந்தித்த அமெ. தூதுவர்

கொழும்பு, மார்ச் 30

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் நேற்றுமுன்தினம் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஸ் சேனாநாயக்கவைச் சந்தித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பொறுப்பேற்ற பின்னர், முதல் முறையாக அவர் இலங்கை இராணுவத் தளபதியை உத்தியோகபூர்வமாகச் சந்தித்துள்ளார்.

இராணுவத் தளபதியின் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இராணுவத் தளபதியும் அமெரிக்கத் தூதுவரும் பல விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

வடக்கில் காணி விடுவிப்பு, நல்லிணக்கம் சம்பந்தமாக இராணுவம் மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஐ)

# மடு மாதாவைத் தேடிச் சென்ற அமைச்சர் ரவி கருணாநாயக்க





மன்னார், மார்ச் 30

மன்னார், மடு திருத்தலத்துக்கு அமைச்சர் ரவி கருணாநாயக்க திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் மாலை விசேட ஹெலி மூலம் மடு திருத்தலத்துக்குச் சென்று விசேட வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார்.

தொடர்ந்து மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பொப்பி சோசை அடிகளார், மன்னார் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் மற்றும் ஏனைய அருட்தந்தையர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது மடுத் திருத்தலத்தின் பல்வேறு அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக மடு திருத்தலத்துக்கான வீதி மின் விளக்குகள் பொருத்துதல், மடு திருத்தலப் பகுதியில் எதிர்வரும் காலங்களில் சூரிய மின்சக்தியூடாக மின் வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## கூட்டமைப்பின் வீறாப்புப் பேச்சுகள்

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசைத் தாக்கும் விதத்தில் அண்மையில் கூட்டமைப்புப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்ட கருத்துக் குறித்து விமர்சித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, இதனை, *'நான் அடிப்பது போன்று அடிக்கிறேன், நீ அழுவதைப் போன்று அழு'* என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளலாமா எனக் கேட்டிருந்தார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் அரசு இழுத்தடிக்கின்றமையைக் கண்டித்து, தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் காட்டமாகக் கூறிய கருத்துக்களை உற்றுநோக்கும்போதும், சம்பந்தரின் அந்தச் செயற்பாட்டுக்கும் அதே முதுமொழியைப் பயன்படுத்தலாமா என்ற எண்ணம் எழுகின்றது.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கின்றமைக்கு கூட்டமைப்பின் தலைவர் வெளியில் - வேறு கட்சிகளில் - இருப்போர் மீது அல்லது அரசு மீது பிழை போடுவது முழுத்தவறு என்பதே எம் கருத்து நிலைப்பாடாகும்.

*"மாகாணங்களில் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். அப்படி நடத்தாமல் ஆளுநர் மூலம் ஆட்சி செய்கின்றமை ஜனநாயகச் செயற்பாடு அல்ல."* - என்றும் கூறியிருக்கின்றார் சம்பந்தன்.

இப்படி ஜனநாயகத்துக்கு மாறான நிலைமை நீடிப்பதற்கு யார் காரணம்? இன்றைய நிலையில் முழுக்க, முழுக்க அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டிய தரப்பு அவர் தலைமை தாங்கும் தமிழ்க் கூட்டமைப்புத்தான் என்பதை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குவதில் கட்சிகளுக்கு இடையே உடன்பாடில்லாத நிலைமை நீடிப்பதே அத்தேர்தல் நடத்தப்படாமைக்குக் காரணம் என்று வெளிவேஷத்துக்குக் கூறப்படுகின்றது.

ஆனால், இதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை அப்படியே மீள நடைமுறைப்படுத்துவது என்ற ஒரு வரியில் அமைந்த சட்டப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்றினால் கூட உடனடியாகப் பழைய முறைப்படி - விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின்கீழ் - இத்தேர்தல்களை எந்தவிதக் காலதாமதமுமின்றி உடன் நடத்தி விடலாம் என்பதை சம்பந்தனின் தளபதியான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனே நாடாளுமன்றத்திலும், வெளியிலும் பல தடவைகள் கூறிவிட்டார்.

அப்படி ஒரு சின்ன விடயத்தை இந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு நகர்த்தாமல் இழுத்தடிக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலை முற்கூட்டியே நடத்தினால், அதன் பெறுபேறு அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலினும் அதன் பின்னர் வரக் கூடிய நாடாளுமன்றப் பொதுத் தேர்தலிலும் தனக்குப் பெரும் பின்னடைவைத் தந்து விடலாம் என்று ஐக்கிய தேசிய முன்னணி - குறிப்பாக அதில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஐ.தே.க - அஞ்சுகின்றது.

தற்போதைய அரசுக்கு முண்டு கொடுத்து, அதனைக் காபந்து பண்ணி, காப்பாற்றி வரும் சம்பந்தனின் தமிழ்க் கூட்டமைப்புக்கும் கூட உடனடியாக ஒரு மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்ளும் திராணி இல்லை.

தன்னுடைய ஆதரவில் தங்கி நிற்கும் ஐ.தே. முன்னணி அரசைப் கொண்டு இந்த ஒரு வரிப் பிரேரணையைக் கூட நிறைவேற்றச் செய்ய முடியாத கையாலாகத்தனத்தில்தான் கூட்டமைப்பு உள்ளது என்று கூறினால் யாரும் நம்புவார்களா?

அப்படியானால் தமிழ்க் கூட்டமைப்பு ஏன் அதனைச் செய்விக்காமல் இருக்கின்றது?

அவ்வாறான ஒரு மாகாணசபைத் தேர்தல் விரைந்து நடத்தப்பட வேண்டும் என்றே பிரதான எதிர்த்தரப்பான கூட்டு எதிரணியும் கூட வற்புறுத்துகின்றது.

இப்போதைய நாடாளுமன்ற ஆசனங்களின் அட்சர கணிதக் கணக்குகளின்படி, அரசில் இருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி ஒத்துழைக்காவிட்டாலும் கூட பொதுஜன பெரமுன போன்ற தரப்புகளுடன் கூட்டமைப்புச் சேர்ந்து தன்பாட்டில் அத்தகைய பிரேரணையை இலகுவாக நிறைவேற்றி விட்டுப் போகலாம். தேர்தல் ஒன்றை உடன் நடத்துவதற்கான இந்த முயற்சிக்கு ஜே.வி.பி. போன்ற கட்சிகள் கூடத் தாராளமாக ஆதரவு வழக்கும் என்பது நிச்சயம்.


அதுதான் நிலைமை என்றால் -

மாகாணசபைத் தேர்தல்களை மேலும் காலதாமதப்படுத்தாமல், பழைய முறைப்படியேனும் நடத்துவதற்கான சட்ட மூலத்தை இன்ன திகதிக்குள் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று காலக்கெடு விதித்து, நிபந்தனை போடாமல் -

வெறுமனே, அதற்காக நாடாளுமன்றத்தில் நீலிக் கண்ணீர் வடிக்கும் உரைகளைக் கூட்டமைப்புத் தலைவர் ஆற்றுவது ஏன்?

*"மாகாணத் தேர்தல் நடத்துவதற்கு எங்களுக்கும் விருப்பம் இல்லை. ஆனால் அதைப் பகிரங்கமாக நாம் சொல்ல மாட்டோம். தேர்தல் நடத்தாமல் இழுத்தடிக்கப்படுகின்றமைக்கு நாம் அடிப்பது போல பாசாங்கு பண்ணி காட்டமாக உரையாற்றுவோம். நீங்கள் அழுவது போல பாசாங்கு பண்ணுங்கள்"* - என்று ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் செய்து கொண்ட எழுதா உடன்பாட்டில் அங்கம்தான் இந்த நாடகத்தனமான வீராவேச - வீறாப்பு - பேச்சுகள்!

# அரச அலுவலகங்களில் மின் சிக்கனம் வேண்டும்




கொழும்பு, மார்ச் 30

மின்சார நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு அரச அலுவலகங்களில் மின்சார பாவனையை மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு அரச அதிகாரிகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

முடியுமானால் தேசிய மின் இணைப்பிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்தி ஜெனரேட்டர்களைப் பயன்படுத்துமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் வருடாந்த மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -


இன்று ஏற்பட்டிருக்கும் மின்சார நெருக்கடியைத் தீர்க்கத் துரிதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டில் வறட்சி தொடர்ந்த வண்ணமுள்ளது. இதற்கு நாம் முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இயற்கையோடு மோதுவது இயலாத காரியம்.

இந்நிலையில் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் அரச அலுவலகங்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும். அலுவலகங்களில் தேவையான நேரத்தில் மட்டும் மின்சாரத்தைப் பயன்படுத்தவேண்டும். குறைந்தளவு மின்குமிழ்களை பயன்படுத்த வேண்டும். மின் விசிறிகளை முடிந்தளவு தவிர்த்துக் கொள்ளலாம்.

குளிரூட்டி, குளிர்சாதனப் பெட்டிகளைப் பயன்படுத்துவதை குறைத்துக்கொள்வதன் மூலம் சிறியளவான தீர்வையாவது எம்மால் பெற்றுக்கொள்ள முடியும். ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய மின்சார நெருக்கடிக்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தற்போதைய மின்நெருக்கடி முடிவுக்கு வரும் வரை அலரி மாளிகையில் தேசிய மின் இணைப்பின் மூலம் மின்சாரம் பெற்றுக்கொள்வது நிறுத்தப்பட்டுள்ளது. அத்தியாவசியமான தேவைக்கு ஜெனரேட்டர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது - என்றார். (ஐ)

## புதிய ரயில் பெட்டிகள் இறக்குமதி!



இந்தியாவிலிருந்து கப்பல் ஊடாக புதிய ரயில் பெட்டிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த ரயில் பெட்டிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

எஸ். 13 டபிள் ஹெட் 14 பெட்டிகள் கொண்ட சொகுசு ரயில், மற்றும் எம். 11 ரயில் இஞ்ஜின்கள் 2 இவ்வாறு கப்பல் ஊடாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக ரயில் பெட்டிகளை இறக்குமதி செய்வதற்கு அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரயில் நிலையம் இன்று திறப்பு

கொழும்பு, மார்ச் 30

களனிவெளி ரயில் பாதையில் மாக்கும்புர பல்நோக்கு போக்குவரத்து நிலையத்துடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ரயில் நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாக பங்கேற்கவுள்ளார்.

இன்று முதல் களனிவெளி ரயில்பாதையில் புதிதாக இரண்டு ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வடக்கு தேர்தல் குறித்து கூட்டமைப்பு மௌனம்

### மஹிந்த தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 30

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் காலங்கடத்துவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனம் காப்பதாக மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அலஹப் பெரும குற்றஞ்சாட்டினார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் வடக்கு, கிழக்கு மாகாண தேர்தல்கள் நடைபெறாவிட்டால் மஹிந்த ராஜபக்ஷ சர்வாதிகாரி என்றும் இனவாதி என்றும் விமர்சித்திருப்பார்கள் என்று குறிப்பிட்ட அவர், தோற்பது தெரிந்தும் மஹிந்த வடக்கு மாகாணத் தேர்தலை நடத்தினார் எனவும் தெரிவித்தார்.

உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மாநகர மற்றும் மேல் மாகாண அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் திருத்தச் சட்டத்தில் பல திருத்தங்களை அரசு செய்து கொண்டது. இதற்குச் சபாநாயகர் அனுமதி வழங்கினார். இது அவருக்கு கரும்புள்ளியை ஏற்படுத்தியுள்ளது.

மாகாண சபைத்தேர்தல் நடத்தத் தேவையில்லை. ஆளுநரின் கீழ் இருந்தால் போதும் என்ற நிலை எதிர்காலத்தில் வரலாம். எல்லைநிர்ணயக்குழு தொடர்பான குழு இரண்டு நாள்கள் மட்டுமே கூடியது. மாகாண சபைத் தேர்தல் நடத்தும் தேவை அரசுக்குக் கிடையாது. முத்திரைக் கட்டணம் நேரடியாக உள்ளூராட்சிச் சபைகளுக்குக் கிடைக்கும் வகையில் திருத்தம் செய்யுமாறு கோரி வருகிறோம்.

மாகாண சபைத்தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக் குழுவுக்கு வழிகள் உள்ளன. தேர்தல் ஆணைக்குழு முடிவுகள் எடுக்க முடியாமல் செயலிழந்துள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முடிவு செய்தபோது அது தொடர்பில் வேறு பட்ட கருத்துகள் முன்வைக்கப்பட்டன. தேர்தல் நடத்தினால் கூட்டமைப்புதான் வெல்லும் அதனால் தேர்தலை நடத்தவேண்டாம் எனக் கோரப்பட்டது.

தமிழ் பேசும் மக்களுக்குத் தமது உரிமையை வழங்கவேண்டும் என்று கூறி அவர் தேர்தலை நடத்தினார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இதில் தோற்றாலும் ஜனநாயகம் வென்றது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கூட்டமைப்பின் தலையீடு பூச்சியமாகவே உள்ளது. இனியாவது காத்திரமாகத் தலையீடு செய்ய வேண்டும். மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் பொலிஸ் உத்தியோகத்தர் இடமாற்றம் குறித்து கூடக் கூறப்பட்டுள்ளது. ஆனால் பல வருடங்களாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாதது குறித்து இதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை - என்றார். (ஐ)

**நாளை**
31.03.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: திருவோணம் அமிர்தம் மு.இ. 08.43 வரை.
திதி : ஏகாதசி முழுவதும் வரை.
இராகுகாலம் : 04.42 - 06.12
சுப நேரம் : 09.12 - 10.42

# மோட்டார் சைக்கிள் திருடி சங்கிலி அறுத்தவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 30

மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்று சங்கிலிகளை அறுத்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றவர் தலைமறைவாகியுள்ளார். தலைமறைவாகியுள்ள நபரைக் கைது செய்வதற்குப் பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் திருடப்பட்டுள்ளது. அது தொடர்பில் உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதேவேளை யாழ். வைத்தியசாலை வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் சென்றனர். இந்தச் சம்பவம் நடைபெற்று சிறிது நேரத்தில் மானிப்பாய் வீதியிலும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சங்கிலி ஒன்றை அறுத்துச் சென்றனர்.

இரு சங்கிலி அறுப்புச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டனர்.

சங்கிலி அறுக்கப்பட்ட இடத்துக்கு அண்மையாகப் பொருத்தப்பட்டு இருந்த சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் மோட்டார்சைக்கிளை அடையாளம் கண்டு அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தபோது, அது கோப்பாய் போலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் திருட்டுப்போன மோட்டார் சைக்கிள் என்பதை கண்டறிந்தனர்.

தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து, சந்தேகநபர்களை அடையாளம் கண்டுகொண்டனர். சந்தேக நபர்கள் அளவெட்டிப் பகுதியில் பதுங்கி இருக்கிறார்கள் என பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸார் அங்கு சென்றபோது சந்தேக நபர்களில் ஒருவர் தப்பி சென்ற நிலையில் மற்றையவர் பொலிஸாரால் மடக்கி பிடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது. அத்துடன் வீதிகளில் அறுத்த ஒன்றரை பவுண் மற்றும் இரண்டு பவுண் தங்க சங்கிலிகள் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன.

கைது செய்யபட்ட நபரைப் பொலிஸார் தமது பாதுகாப்பில் வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், தப்பிச் சென்ற மற்றைய நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# தீவகத்தில் கொள்ளையிட்ட இந்தியர்கள் இருவர் கைது!

## ஊர்காவற்றுறைப் பொலிஸார் மடக்கினர்



யாழ்ப்பாணம், மார்ச் 30

பொருள் விற்பனையாளர் போர்வையில் கொள்ளையில் ஈடுபட்டு வந்த இந்திய குடிமகன்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரம்பன் நாரந்தனை பகுதிகளில் அண்மைக்காலமாகச் சந்தேகநபர்கள் இருவரும் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து மண்டைதீவு பொலிஸ் சோதனைச் சாவடியில் பாதுகாப்பைப் பொலிஸார் பலப்படுத்தி இருந்தனர்.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை மாலை கரம்பன் மற்றும் நாரந்தனை பகுதிகளில் பொருள் விற்பனைக்காகச் சென்ற சந்தேகநபர்கள் இருவரும் வீடுகளில் தனித்திருந்த பெண்களிடம் நகைகளைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றிருந்தனர்.

உடனடியாகப் பாதிக்கப்பட்ட மக்களில் சிலர் மண்டைதீவு பொலிஸ் காவல் அரணுக்குப் பொறுப்பான உப பொலிஸ் பரிசோதகர் விவேகானந்தன் தலைமையிலான குழுவினருக்கு அறிவித்தனர்.

இதனடிப்படையில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வீரசேகரவின் ஆலோசனையின் படி கொள்ளையடித்த நகைகள் பொருள்களுடன் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்த சந்தேகநபர்கள் இருவரையும் துரத்திச் சென்று பொலிஸார் கைது செய்ததுடன் விசாரணையும் செய்து வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகள், வங்கி அட்டைகள், கடவுச் சீட்டுகள், கடவுள் விக்கிரகங்கள், இந்திய நாணயங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. (ஐ)

# காணி, நிதி அதிகாரங்கள் கல்முனைக்கு அவசியம்!



சம்பந்தன் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 30

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய காணி மற்றும் நிதி அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உள்ளக, உள்நாட்லுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கிழக்கு மாகாணத்தில் சில பிரதேச செயலகப் பிரிவுகள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன. இது தொடர்பில் பிரதமர், அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றுக்கு வரமுடியும்.

குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்துக்கு அமைய நாட்டில் 25 மாவட்டங்களும், 331 பிரதேச செயலர் பிரிவுகளும், 4,001 கிராம சேவகர் பிரிவுகளும் காணப்படுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் கல்முனை தமிழ் பிரதேச செயலர் பிரிவு 29 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. துரதிஷ்டவசமாக இங்கு நீண்டகாலமாகப் பிரச்சினை தொடர்கிறது.

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தில் காணி அதிகாரம், நிதி அதிகாரம் வழங்கப்படவில்லை. நாம் ஒன்றாக இணைந்து பேச்சு நடத்தி தீர்மானத்துக்கு வர முடியும். இதுவிடயம் தொடர்பில் ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான காணி அதிகாரங்கள் மற்றும் நிதி அதிகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது.

திருகோணமலையில் மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேசங்களிலும் இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவை பெரிய பிரச்சினைகள் இல்லையென்பதுடன் பேச்சுகள் மூலம் எந்தவொரு இனத்துக்கும் பாதிப்பை ஏற்படாத வகையில் தீர்வைக் காணமுடியும்.

இதேவேளை, திருகோணமலை மாவட்ட செயலாளரை இவ்வருட இறுதி வரை சேவையில் பணியாற்றுவதற்கு இடமளிக்க வேண்டும் – என்றார். (ஐ)

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்காமல் புலமைப்பரிசிலுக்கு தடை முக்கியமா?

## ஜனாதிபதியிடம் கேட்கிறது ஜே.வி.பி.


கொழும்பு, மார்ச் 30

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதை மறந்துவிட்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையை நீக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முக்கியத்துவம் கொடுத்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொது வேட்பாளரை ஏன் மக்கள் ஜனாதிபதியாக்கினர் என அவருக்கோ அல்லது இந்த அரசாங்கத்திற்கோ நினைவு இருக்கின்றதா? தாம் ஏன் ஆட்சிக்கு வந்தோம் மக்கள் ஏன் தம்மை ஆட்சிக்கு கொண்டு வந்தனர், அவர்களுக்கு நீங்கள் எவ்வாறான வாக்குறுதிகளை கொடுத்தீர்கள் என்ற அனைத்தையும் ஜனாதிபதியும் இந்த அரசும் எண்ணிப்பார்க்க வேண்டும். அதேபோல் மாகாணசபைத் தேர்தல் பிற்போகும் எனத் தெரிந்தும் அன்று சபையில் எல்லை நிர்ணய அறிக்கையை எதிர்த்தவர்கள் அனைவரும் இன்று தேர்தல் இல்லையென முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர் – என்றார். (ஐ)

# மின் தடை



யாழ்ப்பாணம், மார்ச் 30

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை–

**யாழ் பிரதேசத்தில் –**

கலட்டி தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி, கொக்குவில் நெதேர்ண் இண்டஸ்ரீஸ், காக்கைதீவு தொழிற்சாலை ஜஸ் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)




## உலக சுகத்திற்காக அலைவதை நிறுத்துவோம்

மனிதர் உலகம் முழுவதிலும் ஆதாயமாக்கி கொண்டாலும், தம் வாழ்வை இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன? (மத்தேயு 16:26) இறையியல் அறிஞரான புல்டர் ஜெஷீன் என்பவர் சுகம் உடலைச் சார்ந்தது மகிழ்ச்சி மனதை சார்ந்தது என கூறுகிறார். சுகம் விரைவில் திக்ட்டி விடும். ஆனால் மகிழ்ச்சியோ நாளுக்கு நாள் அதிகரிக்கும். மனிதர் சொந்த சுகத்தை மட்டும் பாராமல் பிறர் நலனில் கவனம் செலுத்தும் போது அதுவே ஆனந்தமாக மாறும். தனக்காக மட்டும் சேர்க்காமல் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் போது மகிழ்ச்சி பெருகும். தனக்காக மட்டும் வாழாமல் பிறருக்காக வாழ்பவர்களைத்தான் உலகம் போற்றும்.

உலகம் முழுவதையும் கைப்பற்ற வேண்டும் என்று நினைத்த பேரரசர் அலக்ஸ்சான்டர் பல நாடுகளை 3 கைப்பற்றினார். ஆனால் போர்க்களத்தில் நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலையை அடையும் போது அவர்) படைத்தளாதியிடம் தான் இறந்தபிற்பாடு தம்மை சவப்பெட்டியில் வைத்து ஊர்வலமாக கொண்டு போகும் போது தமது இரு கைகளையும் மக்கள் காணும்படி வெளியில் விரித்தவாறு வைக்க வேண்டும் என்றும் இதனால் தான் உலகை விட்டு செல்லும் போது எதையும் கொண்டு செல்லாமல் வெறும் கையுடன் செல்வதை மக்கள் காண வேண்டும் என்று கூறினார். உலக சுகங்கள் நிலையற்றவை பிறருக்காக செய்வதே நிலையானவை என்பதைப் புரிந்து கொள்வோம்.

எ.சஞ்சீகா, கொக்குவில்

# ஜெனீவா காட்டிக் கொடுப்பை விசாரிக்க ஆணைக்குழு தேவை

## கூட்டு எதிரணி ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 30

ஜெனீவாவில் இலங்கையைக் காட்டிக் கொடுத்தவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைக்க வேண்டும் என்று கூட்டு எதிரணி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது பற்றிக் கருத்து வெளியிட்ட கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க, ஜெனீவாவில் நாட்டைக் காட்டிக் கொடுத்தமைக்காக நல்லிணக்கப் பொறிமுறை செயலகத்தின் செயலாளர் மனோ தித்தவெல, அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரைக் கைது செய்ய வேண்டுமெனத் தெரிவித்தார். (ஐ)

# ஆலய மகோற்சவம்

சண்டில்லிப்பாய் அருள் மிகு சீரணி நாகஷணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 11 மணிக்கு கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும். 19 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 20 ஆ திகதி தீர்த்தத்திருவிழாவம் நடைபெறும். (இ)

# தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரை 26 கி.மீற்றரை பத்தரை மணி நேரத்தில் நீந்திக் கடந்த 10 வயதுச் சிறுவன்

## குற்றாலீஸ்வரன் சாதனையை முறியடித்த ஜெய் ஜஸ்வந்த்



ராமேஸ்வரம்,மார்ச்30

தலைமன்னார்–தனுஷ்கோடி இடையே கடலில் 28 கிலோ மீற்றர் தூரத்தை 10ட மணி நேரத்தில் நீந்தி கடந்து தேனி சிறுவன் புதிய சாதனை படைத்தான்.

தேனி மாவட்டம் அல்லிநகரத்தை சேர்ந்த தம்பதி ரவிக்குமார் – தாரணி. இவர்களுடைய மகன் ஜெய் ஜஸ்வந்த் (வயது 10). தேனியில் உள்ள தனியார் பள்ளிக்கூடம் ஒன்றில் 4ஆம் வகுப்புப் படித்து வருகிறான். நீச்சலில் பல சாதனைகளைப் படைத்துவரும் இவன், இலங்கை தலைமன்னாரில் இருந்து ராமேஸ்வரம் தனுஷ்கோடி வரை 28 கிலோ மீற்றர் தூரத்தை கடலில் நீச்சல் அடித்து கடக்கும் சாதனையைநிகழ்த்தி உள்ளான்.

அதற்காக ராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து புதன் மாலை சிறுவன் ஜெய் ஜஸ்வந்த், அவருடைய தந்தை ரவிக்குமார், பயிற்சியாளர் விஜய்குமார், ஒருங்கிணைப்பாளர் ரோஜர் உள்பட 14 பேர் கொண்ட குழுவினர் ஒரு மீன்பிடி விசைப்படகு மூலமாக இலங்கை தலைமன்னாருக்கு சென்றனர். பின்னர் இலங்கை தலைமன்னார் ஊர்மலை என்ற பகுதியில் இருந்து சரியாக நேற்று அதிகாலை 4 மணிக்கு ஜெய் ஜஸ்வந்த் கடலில் நீந்த தொடங்கினான். இந்திய கடல் எல்லையை காலை 9.45 மணிக்கு கடந்த அவன், அங்கிருந்து தொடர்ந்து நீச்சல் அடித்து பகல் 2.30 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல்முனை கரையை வந்தடைந்தான்.

28 கிலோமீற்றர் தூரத்தை சரியாக 10 மணி 30 நிமிட நேரத்தில் கடந்து உலக சாதனை புரிந்துள்ள சிறுவன் ஜெய் ஜஸ்வந்தை அவருடைய பெற்றோர் ரவிக்குமார், தாரணி மற்றும் உறவினர்கள் முத்தமிட்டு வரவேற்றனர்.

சாதனை புரிந்த சிறுவன் ஜெய் ஜஸ்வந்தை தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு நேரில் வந்து டி.ஜி.பி. சைலேந்திரபாபு, கடலோர பொலீஸ் ஏ.டி. எஸ்.பி. இளங்கோ மற்றும் கடற்படை அதிகாரிகள், மத்திய – மாநில புலனாய்வுப் பிரிவு. அதிகாரிகள், சுற்றுலா பயணிகள் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றனர்.

சிறுவன் ஜெய் ஜஸ்வந்துக்கு பாராட்டு குவிந்து வருகிறது. இதுதொடர்பாக அவன் கூறியவை வருமாறு: –

தலைமன்னார் பகுதியில் இருந்து அதிகாலை 4 மணிக்கு நீச்சல் அடிக்க தொடங்கினேன். குற்றாலீசுவரன் சாதனையை முறியடித்து 10ட மணி நேரத்தில் நீந்தி தனுஷ்கோடி வந்தடைந்துள்ளமை மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இந்தச் சாதனைக்கு உறுதுணையாக இருந்த பயிற்சியாளர்,பெற்றோருக்குநன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னும் 3 ஆண்டுகளுக்கு பிறகு தனுஷ்கோடி கடல் பகுதியில் இருந்து நீந்தியபடி தலைமன்னார் சென்று விட்டு மீண்டும் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையிலும் நீந்தி வரத் திட்டமிட்டுள்ளேன். – இவ்வாறு அவன் கூறினான்.

நீச்சல் பயிற்சியாளர் விஜய்குமார் கூறும் போது, இதே தலைமன்னார்–தனுஷ்கோடி இடையே கடந்த 1994 ஆம் ஆண்டில் 12 வயதில் குற்றாலீசுவரன், 16 மணி நேரத்தில் நீந்தி கடந்து சாதனை புரிந்துள்ளார். அதன் பின் பலர் இவ்வாறு நீந்தி கடந்திருந்தாலும் மிகவும் குறைந்த வயதில் 10 1/2 மணி நேரத்தில் கடந்து சிறுவன் ஜெய்ஜஸ்வந்த் உலக சாதனை புரிந்துள்ளார் என்று கூறினார்.

# இன்னொருவரை கொன்று தான் இறந்து விட்டார் என நாடகமாடிய தீவிரவாதிக்கு ஆயுள் தண்டனைத் தீர்ப்பு!

ஒரே உருவமுள்ள இன்னொருவரைக்கொன்று தான் இறந்துவிட்டார் என நாடகமாடிய தீவிரவாதிக்கு மும்பை நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. இவர் குண்டுவெடிப்பு வழக்கில் சிக்கிய குற்றவாளி ஆவார்.

மும்பை குண்டுவெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கடாரி, அவரைப் போன்ற தோற்றம் கொண்ட உதிரிப் பாகங்கள் விற்பனையாளர் வஹாப் பங்கர்வாலா என்பவரைக் கொலை செய்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

தீவிரவாதி கடாரி, தன்னைப் போன்ற தோற்றம் கொண்ட உதிரிப் பாகங்கள் விற்பனையாளரைக் கொன்ற இச்சம்பவம் மீரா சாலைப் பகுதியில் உள்ள ஒரு வாடகை பிளாட்டில் 2003 ஓகஸ்ட் 15 அன்று நடந்தது என்று அரசு வழக்கறிஞர் சஞ்சய் லோண்டே தெரிவித்தார்.

தீவிர்வாதி சையத் மஸ்டிக் வஹியுதின் கடாரி கொலை செய்த வஹாப்பின் தலையைத் துண்டித்து அதை விறார் பகுதியில் உள்ள சிற்றோடை ஒன்றில் எறிந்தார். மீதமுள்ள உடலை கடாரி எரித்துவிட்டார். இருவரின் தோற்றமும் ஒரே மாதிரி இருந்ததால் இறந்தது கடாரி என்று நம்பவைத்து பொலிஸாரையும் வழக்கையும் திசை திருப்பினார்.

அதன் பின்னர், கடாரி மாலேகானுக்குத் தப்பிச் சென்றார். அங்குதான் ஒரு மருத்துவரின் கிளினிக்கில் ஒரு கம்பவுண்டரைப் போல வேறொரு அடையாளம் மற்றும் வேலையை உருவாக்கிக் கொண்டார்.

நீண்டகாலம் மறைந்து வாழ்ந்த அவர் சமீபத்தில் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்படும்வரை இந்த ஆள்மாறாட்டத்தில் அவரது போலி அடையாளம் தொடர்ந்தது.

இந்நிலையில் இவ்வழக்கின் இறுதி விசாரணை நேற்றுமுன்தின்ம் மும்பையை அடுத்த தானே நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இவ்வழக்கை விசாரித்த தானே மாவட்ட நீதிபதி எச் எம்.பட்வர்தன், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சையத் மஸ்டிக் வஹியுதின் கடாரி (எனும்) இமாம் அபு மன்சூர் ஹசானி (61) என்பவர் மீதான குற்றச்சாட்டு தக்க சாட்சிகளுடன் நிரூபணம் ஆகியுள்ளதாகத் தெரிவித்தார். மேலும் கடாரிக்கு ஆயுள் தண்டனையும் 5,000 ரூபாய் அபராதம் விதித்தும் தீர்ப்பளித்தார்.

# ஹோட்டல் சரவணபவன் நிறுவுநர் அண்ணாச்சியின் ஆயுள் தண்டனையை உறுதி செய்தது உச்சநீதிமன்று





இந்தியாவில் பிரபலமான ஹோட்டல் சரவண பவனில் வேலை பார்த்த ஊழியரைக் கொலை செய்த வழக்கில், ஹோட்டல் நிறுவுநர் பி.ராஜகோபாலுக்கு (அண்ணாச்சிக்கு) ஆயுள் தண்டனையை உறுதிசெய்து உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

1990களின் இறுதியில் பிரின்ஸ் சாந்தகுமார் என்பவர் ஹோட்டல் சரவணபவனில் ஊழியராகப் பணியாற்றி வந்தார். அவரின் மனைவி ஜீவஜோதி, கணவரைக் காண ஹோட்டல் சரவணபவனுக்கு வருவார் எனவும் அப்போது அண்ணாச்சிக்கு ஜீவஜோதி மீது ஈர்ப்பு ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

ஜீவஜோதியை அடைவதற்காக பிரின்ஸ் சாந்தகுமார் கொடைக்கானல் மலையில் கொன்றுபுதைக்கப்பட்டார் என 2001 இல் புகார் வெடித்தது. ஜீவஜோதி இதுதொடர்பாகப் புகார் அளித்தார்.

இந்த வழக்கில் சரவண பவன் அதிபர் அண்ணாச்சி ராஜகோபால் உள்ளிட்டவர்கள் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். பூந்தமல்லி நீதிமன்றம் ராஜகோபாலுக்குப் பத்தாண்டுகள் சிறை தண்டனை விதித்தது. மேன்முறையீட்டில் உயர் நீதிமன்றமும் இதை உறுதி செய்தது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மீள்மேன்முறையீடு செய்த ராஜகோபால் அதனால் பிணையில் வெளியில் இருந்தார்.

உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில், சரவணபவன் நிறுவுனர் பி.ராஜகோபால் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டது. இதையடுத்து அவருக்கு ஆயுள் தண்டனையை உறுதிசெய்து உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

# ஒரு தொகுதியில் 185 பேர் போட்டி வாக்களிப்பு வாக்குச்சீட்டின் மூலம்!

## அங்கு வாக்குப்பதிவு இயந்திரம் கைவிடப்பட்டது

தெலுங்கானா மாநிலம் நிஜாமாபாத் மக்களவைத் தொகுதியில் முதல் முறையாக, வாக்குப்பதிவு இயந்திரங்களுக்குப் பதில் வாக்குச் சீட்டு முறையில் தேர்தல் நடத்தப்படுகிறது. அந்தத் தொகுதியில் மொத்தம் 185 வேட்பாளர்கள் போடியிடுகின்றனர். அத்தனை வேட்பாளர்கள் பெயர்களை – அல்லதுசின்னத்தை – கொண்டவையாக வாக்குப்பதிவு இயதிரங்களை ஒழுங்குபடுத்துவது சிக்கல் என்பதால் அங்கு வாக்குச்சீட்டு மூலம் வாக்களிப்புக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது

நாடாளுமன்றத் தேர்தலில் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள 17 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 11 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதில் நிஜாமாபாத் மக்களவைத் தொகுதியில் போட்டியிட 200க்கும் அதிகமான வேட்பாளர்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். மனுக்கள் பரிசீலனை முடிந்து மனுக்களை வாபஸ் பெறுவது நேற்று முன்தினம் மாலை 4 மணியுடன் முடிவடைந்தது. அதன் பின்னர் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில், 185 வேட்பாளர்கள் போட்டியில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
(யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 50 மீற்றர் ஆஸ்பத்திரி வீதியில்)
பிரதி சனிக்கிழமைகளில்
வரிமதிப்பீட்டாளர் 9.00 - 3.00
பதிவாளர் Open 10.00 - 4.00
பதிவாளர் Limited 1.00 - 4.00
புள்ளிவிபரவியலாளர் 10.00 - 2.30
சட்டமாணி நுழைவு 10.00 - 2.30
முகாமைத்துவ உதவியாளர் 10.00 - 2.30
வருமானப் பரிசோதகர் 10.00 - 2.30
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்
SLAS Open Limited 9.00 - 4.00
SLEAS Open Limited 9.00 - 3.00
ஆசிரியர் தெரிவு 9.00 - 3.00
முகாமைத்துவ உதவியாளர் Open Limited 10.00 - 2.30
வருமானப்பரிசோதகர் 10.00 - 2.30
வரி மதிப்பீட்டாளர் 9.00 - 3.00
சகல பரீட்சைகளுக்குமான சகல வினாத்தாள்களுக்கும் உரிய விடயங்கள் வழங்கப்படும்.
076 688 3394

போட்டிப் பரீட்சை இறுதிக் கருத்தரங்கு
P.உமாசங்கர்
& வளவாளர்களின் ஏப்ரல் 07 இல் நடைபெறவுள்ள வடமாகாண இறைவரி மதிப்பீட்டாளர்
பொது அறிவும் நுண்ணறிவும் கிரகித்தலும்
31.03.2019
ஞாயிறு 9 am - 4 Pm
நாவலர் கல்வி நிறுவனம்

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்
A/L 2021
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம்
30.03.2019 சனி 08.00 மணி

# முதல் குழந்தை பெற்று 26 நாள்களில் இரட்டை குழந்தை பிரசவித்த பெண்

## வங்காள தேசத்தில் நடந்த அதிசயம்



டாக்கா,மார்ச்30

வங்காளதேசத்தில் ஒரு பெண்ணுக்கு முதல் குழந்தை பிறந்த 26 நாளில், மீண்டும் இரட்டைக்குழந்தைகள் பிறந்திருக்கின்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

வங்காளதேசத்தில் வசித்து வருபவர்கள் சுமன் பிஸ்வாஸ், ஆரிபா சுல்தானா (வயது 20) தம்பதியர்.

கர்ப்பிணியாக இருந்த ஆரிபா சுல்தானாவுக்குகுல்னாமருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கடந்த மாத இறுதியில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தை குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாகவேபிறந்தது.

இந்த நிலையில், கடந்த 21 ஆம் திகதி ஆரிபா சுல்தானாவுக்கு கடுமையானவயிற்றுவலிஏற்பட்டது. இதனால் அவரை ஜெசோர் ஆத் – தீன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு அவரை மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவ நிபுணர் டாக்டர் ஷீலா பொத்தார்பரிசோதித்தார். ஸ்கேன் பரிசோதனையும் நடத்தப்பட்டது.

இதில் ஆரிபா சுல்தானாவுக்கு ஏற்கனவே ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளபோதும், அவருக்கு மற்றொரு கர்ப்பப்பை இருப்பதுவும், அந்த கர்ப்பப்பையில் இரட்டைக்குழந்தைகள் இருக்கின்றமையும் தெரியவந்தது. இதைக்கண்டுடாக்டர்கள்உட்பட அனைவரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

உடனே அவருக்கு சிசேரியன் அறுவை சிகிச்சை செய்ய டாக்டர் ஷீலா பொத்தார் முடிவு செய்தார்.

அதன்படி ஆரிபா சுல்தானாவுக்கு அவர் சிசேரியன் அறுவை சிகிச்சை செய்தார். அதில் அந்தப் பெண்ணுக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தன. இதில் ஒரு குழந்தை ஆண் மற்றொரு குழந்தை பெண்.

முதல் குழந்தையை பெற்றெடுத்த 26 நாளில் ஆரிபா சுல்தானா இந்த இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்தார்.

4 நாள்கள் மருத்துவமனையில் வைத்து அந்தப்பெண்ணையும், குழந்தைகளையும் பராமரித்த டாக்டர்கள் அதன்பின்னர் அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

இதுபற்றி டாக்டர் ஷீலா பொத்தார் கூறும்போது, ஒரு கர்ப்பப்பை மூலம் முதல் குழந்தை பிறந்த நிலையில், மற்றொருகர்ப்பப்பையில்மேலும்2குழந்தைகள் இருக்கின்றமை அந்தப்பெண்ணுக்கு முதலில் தெரியாது. குழந்தைகள் நல்ல ஆரோக்கியமாக உள்ளன. எல்லாம் நல்ல விதமாக முடிந்ததில் எனக்கு மகிழ்ச்சி என்று குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம்பற்றி மருத்துவ நிபுணர்கள் கூறுகையில், இரட்டை கர்ப்பப்பை இருக்கின்றமை அறிகுறி எதுவும் பெண்ணுக்கு தெரியாது. பிறப்பிலேயே இரட்டைக் கர்ப்பப்பை அமைந்திருக்கும். இது அபூர்வமானது. இரட்டை கர்ப்பப்பையிலும் குழந்தைகள் இருக்கிறபோது கருச்சிதைவுக்கு அல்லது முன்கூட்டியே குழந்தை பிறப்பதற்கு வாய்ப்பு உண்டு எனத் தெரிவித்தனர்.

# விபத்து நடந்த இடத்தில் இருட்டில் கூடி நின்றோர் மீது பாய்ந்தது லொறி

## கௌதமாலாவில் 30 பேர் பரிதாபச் சாவு



மக்கள் நிறைந்த இருண்ட நெடுஞ்சாலையில் கட்டுக்கடங்காமல் வந்த லொறி மோதியதால் 30 பேர் பலியான சம்பவம் கௌதமாலா நாட்டில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

இத்துயரச் சம்பவம் குறித்து சோலோலா மாகாணத்தைச் சேர்ந்த நஹூலா நகராட்சி தீயணைப்புத் துறைசெய்தித்தொடர்பாளர்செசிலியோ சாக்காஜ் தெரிவித்த வை வருமாறு:-

நெடுஞ்சாலைஒன்றில்விபத்தொன்றில் கொல்லப்பட்ட ஒரு நபரைக் காண ஏராளமான பேர் குழுமியிருந்தனர். அப்போது அவ் வழியே கனரக சரக்கு லொறி ஒன்று படுவேகத்துடன் வந்து கொண்டிருந்தது.

நெடுஞ்சாலையில் எவ்வித விளக்கொளியும் இல்லாமல் இருட்டாக இருந்ததால் கட்டுக்கடங்காத வேகத்துடன் வந்த லொறி எதிர்பாராத விதமாக குழுமியிருந்த மக்கள் மீது மோதியது. இதனால் அங்கிருந்தவர் களில் சுமார் 30 பேர் பலியாகியுள்ளனர். - என்று அவர் தெரிவித்தார்.

இக்கோர விபத்து குறித்து, கௌதமாலா அதிபர் ஜிம்மி மொரால்ஸ் ட்வீட் செய்தபதிவில், "இத்துயரச்சம்பவத்தில் பலியானோருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். உயிரிழந் தவர்களின் குடும்பத்தினருக்கு உடனடியாக தேவைப்படும் அனைத்து உதவிகளும் அரசு செய்யும்" என்று தெரிவித்துள்ளார்.

# தலிபான்களின் அதிரடி தாக்குதலில் ஆப்கனில் ஐந்து பொலிஸார் மரணம்



காபூல்,மார்ச்30

ஆப்கானிஸ்தான் சோதனைச்சாவடி மீது தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில்,5 ஐந்து பொலிஸார் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் ஹெல்மாண்ட் மாகாணத்தின் கஜாகி மாவட்டத்தில் ஒரு பொலிஸ்சோதனைச்சாவடி செயல்பட்டு வந்தது.

அங்கு நேற்று முன்தினம் அதிகாலையில்வழக்கம்போலபொலிஸார்சோதனைப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு திடீரென்று தீவிரவாதிகள் வந்து துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டு, அதிரடியாகத் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலை சற்றும் எதிர்பார்த்திராத பொலிஸார் நிலை குலைந்து போயினர்.

அந்தத் தாக்குதலில் 5 பொலிஸார் உயிரிழந்தனர். 2 பேர் படுகாயம் அடைந்தனர். தாக்குதலை நடத்திவிட்டு தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பித்து விட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த பாதுகாப்பு படையினர், மீட்பு படையினர் விரைந்து வந்து சம்பவ இடத்தைச் சுற்றி வளைத்தனர். படுகாயம் அடைந்த பொலிஸாரை மீட்டு சிகிச்சைக்காக அம்புலன்ஸில் அனுப்பி வைத்தனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் தலிபான் தீவிரவாதிகளாகத்தான் இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. இருந்தபோதிலும் அவர்கள் தரப்பில் எந்த தகவலும் வெளியிடப்படவில்லை.

முன்னதாக நேற்றுமுன்தினம் புல் இ கும்ரி என்ற இடத்தில் தலிபான் தீவிர வாதிகளுக்கும், பாதுகாப்பு படையினருக் கும் இடையே மோதல் வெடித்தது. இதில் 4 தலிபான்கள் கொல்லப்பட்டனர்.

சிவபூமி அறக்கட்டளையின் ஆதரவில்
கூழாவடி, ஆனைக்கோட்டை
அபயம் மருத்துவ சேவை நிலையம்
ABAYAM MEDICAL CLINIC AND MEDICAL EDUCATION CENTRE
திறப்பு விழா
காலம் : நாளை 31.03.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.30 மணி
அன்புடையீர்!
வணக்கம்
எமது மண்ணில் வாழும் மக்களின் மருத்துவ சேவையில் தமது பங்களிப்பையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்காக பிறநாடுகளில் பணியாற்றும் எம் மண்சார்ந்த வைத்திய நிபுணர்கள் சேவையாற்ற முன்வந்துள்ளனர். துறைசார் வைத்திய நிபுணர்கள் இலவசமாக இப்பணியை ஆற்றுவதற்காக மருத்துவ சேவை நிலையம் திறக்கப்படுகிறது. இவ்வைபவத்திற்கு அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
நிலம், கட்டடம் அன்பளிப்பு
வைத்தியகலாநிதி அம்பலவாணர் பொன்னம்பலம் குடும்பம்
(அவுஸ்திரேலியா - சுதுமலை)
நிகழ்ச்சி நிரல்
தலைமை
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)
பிரதம விருந்தினர் உரை
வைத்திய நிபுணர் கந்தப்பிள்ளை பார்த்தீபன்
(லண்டன்)
சிறப்பு விருந்தினர் உரை
வைத்தியகலாநிதி ந.சத்தியமூர்த்தி
(பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை)
நன்றியுரை
மாலை 5.00 மணி - இலவச மருத்துவ சேவை ஆரம்பம்
குறிப்பு : நுரையீரல் சம்பந்தமான நோயாளருக்கு மாலை 5.00 மணி முதல் 8.00 மணிவரை நுரையீரல் சம்பந்தமான விசேட வைத்திய நிபுணரின் ஆலோசனை கள் நடைபெறும். நுரையீரல் சம்பந்தமான நோயாளர்கள் சமுகம் தரவும்.
ABAYAM Foundation For Health and Education U.K )
நிர்வாக சபை
சிவபூமி அறக்கட்டளை, இலங்கை
தலைமை அலுவலகம்
கோண்டாவில்
021 222 7938
நன்றி

போட்டி பரீட்சை வகுப்புகள்
P.உமாசங்கர்
& வளவாளர்களின்
SLAS, SLEAS,
புள்ளிவிவரவியலாளர்
அலுவலர், பதிவாளர்,
சட்டக் கல்லூரி
பொது அறிவும் நுண்ணறிவும்
P.உமாசங்கர் & S. நவநீதன்
31.03.2019 ஞாயிறு
9 AM - 4 PM
நாவலர் கல்வி நிறுவனம்

தொடர் கருத்தரங்கு
30.03.2019
9am - 3pm
P.கமல்தாசன்
மற்றும் துறைசார் வளவாளர்கள்
P.N.சுதர்சன் - SLEAS
K.தெய்வேந்திரம் SLAS
A.K. கீர்த்திராஜன் (MA)
மற்றும் சட்டம்
S. பரணிதரன் LLB
A.சுபாகரன் - SLEAS
SLAS, SLEAS (Open /Ltd)
நடைபெறும்.
நாவலர் கல்வி நிறுவனம்

நெல்லியடியில் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
யாழ்ப்பாணக் கல்லூரி, வடமராட்சி – அனுபவம் வாய்ந்த வளவாளர்களால் எல்லாப் பாட விடயங்களும் கற்பிக்கப்படும்.
வடமாகாண வரிமதிப்பீட்டாளர் விசேட வகுப்புக்களும்
பொது அறிவு
வியாழக்கிழமை/ வெள்ளிக்கிழமை
பிற்பகல் 5.00 - 7.00 மணி
பொது உளச்சார்பு : சனிக்கிழமை
பிற்பகல் 4.00 - 7.00
T.தவசேகர்
மொழித்திறன்: ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.30 - 12.00 மணிக்கு
இடம் : உயர் கல்லூரி, நெல்லியடி
HNB Assurance (கட்டடம் மேல்மாடி)
தொடர்பு : 077 435 0958





# சீரடி சாயி சர்வதேச ஸ்தாபனங்களின் அறங்காவலர்கள் ஒன்றுகூடும் நிகழ்வு

வெளிநாடுகளில் இயங்கிவரும் சாயி ஸ்தாபனங்களின் அறங்காவலர்கள் ஒன்றுகூடும் வருடாந்த நிகழ்வு சமீபத்தில் மஹாராஸ்ட்ரா மாநில சீரடி சாயி சன்ஸ்தானில (சந்நிதானம) இடம் பெற்றது. நிகழ்வுக்கு சாயி சன்ஸ்தான் அறங்காவலர் ஸ்ரீ பிபின்டாடா சங்கராவ் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் ஆரமப் உரை நிகழ்த்திய சாயி சன்ஸ்தானின் அமெரிக்கப் பிரதிநிதி ஸ்ரீ பாலகிருஷ்ண சந்து பட்டேல் தனது உரையில், அமெரிக்க மாநிலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரமாண்டமான சீரடி சாயி ஆலயத்தின் சிறப்புகள் பற்றித் தெரிவித்து, அடுத்த மாதமளவில் அந்த சீரடிஆலயம்திறந்துவைகக்கப்படவுள்ளதாகவும் கூறினார். அத்துடன், சீரடி சாயி பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருவதாகவும் தெரிவித்தார்.

சீரடி சாயி சன்ஸ்தான் இலங்கைப் பிரதிநிதியும சீரடி சாயி இலங்கை மத்திய நிலையத்தின் தலைவருமான எஸ்.என்.உதயநாயகன் தனது உரையில் கூறியதாவது, கொழும்பு புதுச்செட்டித் தெருவில் உள்ள சீரடி சாயி ஆலயத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும நடைபெறும் இரவு ஆராத்தியின் போது, பாபாவுக்கு பல்லககு ஊர்வல சேவை இடம் பெறுகின்றது. இதன் போது தெய்வீக உணர்வு ஏற்படுவதாக பக்தர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் பக்தர்கள் விரதமிருந்து வேண்டிக்கொள்வதை பாபா வழங்கி வருகிறார் என்பதுவும் கண்கூடு என்றார்.

சீரடி சாயி சன்ஸ்தான் அறங்காவலர் ஸ்ரீ பிபின்டா தனது முடிவுரையின் போது கூறுகையில் – தான் கொழும்பில் உள்ள சீரடி சாயி ஆலயத்துக்கு விஜயம்செய்த போது ஏற்பட்ட தெய்வீக அனுபவங்களை விவரித்தார். துவாரகமாயி தோற்றத்தில் மூலஸ்தானத்தில் அமைந்துள்ள சீரடி பாபாவின் பிரமாண்டமான திருவுருவச் சிலை, தன்னை மெய்சிலிர்க்க வைத்ததாகவும, சீரடியில் போன்றே கொழும்பு சாயி சந்நிதானத்திலும் தெய்வீக சக்தியை உணர்ந்ததாகவும் கூறினார்.

சாயி சன்ஸ்தான் மக்கள் தொடர்பு அதிகாரி ஸ்ரீ மோஹன் ஜகந்நாத் யாதவ் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். சாயி சன்ஸ்தானின் சார்பில இலங்கை சீரடி சாயி நிலையத் தலைவர் எஸ்.என். உதயநாயகன் மற்றும் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட கொழும்பு சாயி இயக்கப் பிரமுகரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எஸ்.ஆர்.நாராயணசாமியும் அவரது பாரியாரும் கௌரவிக்கப்பட்டனர். கொழும்பு சாயி ஆலயத்துக்கென சமாதியுடன் கூடிய பிரமாண்டமான சீரடி சாயி படம் ஒன்றுட் இலங்கைப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது.



யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் எம் எஸ் எம். றஹீம் தற்போது கல்லூரியில் கற்கும் வறிய மாணவர்களுக்கு சப்பாத்து வழங்குவதற்காக ரூபா ஐம்பதாயிரத்தை பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளரிடம் அண்மையில் கையளித்த போது...

படம் : எம்.எல்.லாபீர்.

## யாழ்ப்பாணத்திலுள்ள பள்ளிவாசல்களின்

# நம்பிக்கையாளர் சபைத் தெரிவு மிக நீண்ட காலத்தின் பின்னர்

யாழ்ப்பாணம் மார்ச் 30

யாழ்ப்பாணத்தில் உள்ள பள்ளிவாசல்களில் நம்பிக்கையாளர் சபை நீண்ட காலமாக தெரிவுகள் மேற்கொள்ளப்படவில்லை இது சம்பந்தமான பல சுற்று நிருபம் அனுப்பியும் நடைமுறையிலுள்ள நிர்வாகத்தினர் கவனம் எடுக்கவில்லை என்பது முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் தகவலின் பிரகாரம் தெரிய வந்துள்ளது.

யுத்தம் காரணமாக சேதமுற்றிருந்த பள்ளிவாசல்கள் புனரமைப்பில் யாழ். முஸ்லிம்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

தற்போது அனைத்து பள்ளிவாசல்களின் பனரமைப்பு பணிகள் ஓரளவு பூர்த்தியாகி தொழுகைகள் இடம் பெற்று வருகின்றன. எனவே இவ் வருடம் யாழிலுள்ள அனைத்து பள்ளிவாசல் மஹல்லா வாசிகளும் ஒன்று கூடி புதிய நம்பிக்கையாளர்கள் சபையை உருவாக்க வேண்டுமென விரும்புகின்றனர்.


இதன் பிரகாரம் எதிர்வரும் 31 ஆம் திகதி யாழ். பெரிய முகிதீன் ஜும்மாப்பள்ளியில் புதிய நம்பிக்கையாளர் சபை நியமனம் தெரிவு மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன. புதிய நம்பிக்கையாளர்கள் தகுதியானவர்களாகவும் அல்லாவுக்கு மட்டும் பயந்தவர்களாகவும் ஸகாத் வழங்கக் கூடியவராகவும் நேர்மையானவர்களாகவும் பொறுமையாளராகவும் அந்தந்த பள்ளி வாசல் மஹல்லாவில் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் அவசியமாகும்.

தெரிவின்போது யாழ். உலமா சபை மற்றும் த வா அமைப்பின் பிரதிநிதிகளும் முஸ்லிம் சமய கலாசார திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொள்கின்றமை சிறப்பானதாகும் என மஹல்லா வாசிகள் விரும்புகின்றனர்.





இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் இரண்டு பழைய மாணவர்களுக்கு ஞான.திருக்கேதீஸ்வரன் – தேசமானி விருது, மூ.புவீஸ்வரன் – அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம் பெற்றமையையிட்டு பாடசாலை சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பாராட்டுவிழாவின் போது...



யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியின் லண்டன் கிளை பழைய மாணவர் சங்கம் கல்லூரிக்கு போட்டோகொப்பி இயந்திரத்தை தாய் சங்கத்தின் உறுப்பினர்கள் மூலம் அதிபரிடம் அண்மையில் கையளித்த வேளையில்....

# யோகா புதிய பயிற்சி நெறிகள் நல்லூர் தேரடி அருகே ஆரம்பம்!

யாழ் யோகா உலகம் நல்லூர் தேரடி அருகே அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் புதிய யோகா பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கின்றது.

இப்பயிற்சி நெறிகளுக்கான அறிமுக நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் சி.உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உளவளத்துணை ஆசிரியர் இக்னேசியஸ் அவர்களின் யோகா பற்றிய விசேட கருத்துரையும் யாழ்.யோகா உலக மாணவர்கள் வழங்குகின்ற யோகா அசைவுகளும் இடம்பெறும்.

யோகா வகுப்புக்கள் காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணி தொடக்கம்7மணிவரை இருபிரிவுகளாக ஒரு மாதம் தினமும் நடைபெறும்.

ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிராணாயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைகள் அனுபவம் உள்ள ஆசான்களால் நுணுக்கமாக பயிற்றுவிக்கப்படுவதுடன் நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு மருத்துவர்களின் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

யோகாப்பயிற்சிநெறியில் இணைய விரும்புபவர்கள் அறிமுக நிகழ்வில் கலந்து கொள்வது அவசியமானது. ஆர்வமுள்ள அனைவரும் யோகா பயிற்சி நெறிகளில் இணைந்து பயனடைய முடியும் என்று யாழ் யோகா உலகம் அறிவிக்கிறது.

# தமிழர் தரப்பு அரசுடன் பேரம் பேச பட்ஜெட்டே கடைசிச் சந்தர்ப்பம்!



## கைதிகள் விடுதலையை வலியுறுத்துமாறு கோருகின்றார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

கொழும்பு, மார்ச் 30

இந்த அரசில் தமிழ்த் தரப்புக்குப் பேரம்பேசும் இறுதிச் சந்தர்ப்பமாக ஏப்ரல் ஐந்தில் நடைபெறவுள்ள வரவு – செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு அமையவுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தலைமைகள் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப் பயன்படுத்தவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போர் நிறைவுக்கு வந்து ஒரு தசாப்தத்தைத் தொடவுள்ள நிலையில் இன்னமும் இலங்கையின் சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின்போது இவர்களின் விடுதலையும் பிரதான பேசுபொருளாக இருந்தது. ஆனால் ஆட்சி மாறிய பின்னர் அந்த விடயத்தை அழுத்தமாகப் பிடிப்பதற்கு தமிழ்த் தரப்புக்கள் தவறியே வந்துள்ளன. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு உறுதியான பதிலளிக்க வேண்டும் என்ற விடயத்தை முன்வைத்துப் பேரம் பேசவேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்டால் எதிர்காலத்தில் கூட்டமைப்பின் எந்த ஒத்துழைப்பும் அரசுக்குத் தேவைப்படாது. அதன் பின்னர் கூட்டமைப்பால அரசைக் கிடுக்கிப்பிடிக்க முடியாது என்பதே யதார்த்தமாகும் – என்றார். (ஐ)

## திருக்கேதீஸ்வரம் வளைவு உடைப்பு விரைவில் மைத்திரியின் கவனத்துக்கு

### மன்னார் அரச அதிபர் உறுதியளிப்பு

மன்னார், மார்ச் 30

திருக்கேதீஸ்வரம் ஆலய அலங்கார வளைவு உடைப்பு மற்றும் நந்திக்கொடி அவமதிப்பு ஆகிய விவகாரங்களை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் உறுதியளித்துள்ளார்.

இந்த விவகாரங்களைக் கண்டித்து மன்னாரில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் இறுதியில் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைப் போராட்டக்காரர்கள் மாவட்ட அரச அதிபர் மோகன்ராஸிடம் கையளித்தனர்.

இதன்போது அந்த மகஜரை உடனடியாக ஜனாதிபதியின் கவனத்துக்காக அனுப்பி வைப்பதாக' அரச அதிபர் உறுதியளித்தார்.

திருக்கேதீஸ்வரம் ஆலய அலங்கார வளைவு உடைப்பு மற்றும் நந்திக்கொடி மிதிக்கப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட செயலக பிரதான வீதியில் நேற்றுக் காலை இந்த கவனவீர்ப்புப் போராட்டம் அமைதியான முறையில் இடம்பெற்றது. ஆலடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னால் நேற்றுக் காலை ஒன்று கூடிய மக்கள் மன்னார் மாவட்ட செயலக பிரதான வீதிக்குச் சென்றனர்.

வீதியின் இரு மருங்கிலும் கூடிய நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் மற்றும் நந்திக்கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## கல்வி அமைச்சு செயலராக நிஹால் ரணசிங்க நியமனம்

கொழும்பு, மார்ச் 30

கல்வி அமைச்சின் புதிய செயலாளராக நிஹால் ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

அனுபவமிக்க நிர்வாக சேவை அதிகாரியான நிஹால் ரணசிங்க இதற்கு முன்னர் குடிவ,;வு, குடியகல்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாய கமாக சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜெனீவாவுக்கான தூதரை திருப்பியழைக்கவேண்டும்

### மொட்டுக் கட்சி விடாப்பிடி

கொழும்பு, மார்ச் 30

ஜெனீவாவுக்கான இலங்கைத் தூதுவரை அழைத்து ஜனாதிபதி கடுமையான அதிருப்தியை வெளியிடவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக வக்கும்புர இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இராணுவத்தினரையும் தன்னையும் ஜெனீவாவில் காட்டிக்கொடுத்துள்ளனர் என களுத்துறை, மீகஹதென்ன பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில் ஜெனீவாவுக்கான இலங்கைத் தூதுவர் அஜீஸை மீண்டும் நாட்டுக்கு அழைத்துக் கடுமையான அதிருப்தியை வெளியிடவேண்டும் – என்றார். (ஐ)

## கல்முனை பிரதேச சபை விவகாரம் இனக்கலவரத்தையே உருவாக்கும்

### ஜே.வி.பி. சபையில் எச்சரிக்கை



கொழும்பு, மார்ச் 30

கல்முனை பிரதேச சபை விவகாரத்தால் தமிழ் மற்றும் முஸ்லிம் இனக்கலவரம் உருவாகும் என ஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்றது.

இதன்போது ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மற்றும் அமைச்சர் ஹரிஸ் ஆகியோருக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன்போது விஜித ஹேரத் மேலும் தெரிவிக்கையில்,

அனைவரும் இணக்கம் தெரிவித்த ஒரு விடயத்தில் பிரதி அமைச்சர் ஹரிஸ் தனிப்பட்ட அரசியல் வாக்குகளை மட்டுமே கருத்தில் கொண்டு பிரச்சினையை உருவாக்குகின்றார். எல்லைநிர்ணயப் பிரச்சினை என ஒன்றும் இல்லை.

இந்தச் செயற்பாடு எதிர்காலத்தில் தமிழ் முஸ்லிம் இனக்கலவரம் ஒன்றில் வந்தே முடியும் என்பதை முன்கூட்டியே எச்சரிக்கின்றேன். மனதில் வைத்துகொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

## பஸிலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 30

திவிநெகுமநிதி மோசடி தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிரான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பு வெளியாகும்வரை வழக்கை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 7ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக நீதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதி தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, இந்த வழக்கு தொடர்பான விசாரணையை மேற்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளதுடன் அது தொடர்பான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பு வெளியாகும்வரை வழக்கை ஒத்திவைக்க மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (ஐ)

## ஜனாதிபதியின் மகனுக்கு மே 9 ஆம் திகதி திருமணம்

கொழும்பு, மார்ச் 30

திருமண பந்தத்தில் இணைகிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹம் சிறிசேன.

மே மாதம் 9 ஆம் திகதி ஷங்ரி – லா ஹோட்டலில் நடைபெறவுள்ள இந்த திருமணத்தில் முக்கிய பல அதிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துல வீரரத்னவின் புதல்வி நிபுனியுடனான காதலையே திருமணத்தில் முடித்துள்ளார் தஹம். (ஐ)

# யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக மின்னொளியில் ரி – 20 கிரிக்கெட்!







யாழ்ப்பாணம், மார்ச் 30

விஜயரட்ணம் ஞாபகார்த்த இருபதுக்கு இருபது (ரி - 20) கடின பந்து துடுப்பாட்ட போட்டி யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக மின்னொளியில் நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கழகங்களில் அழைக்கப்பட்ட எட்டு கழகங்களுக்கு இடையில் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டிக்கான அணிகளின் அறிமுகம், சீருடை (ஜெர்சி) வெளியிடு என்பன நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஊடகவியலாளர் சந்திப்பும் நடைபெற்றது.

அதன்போது போட்டியை நடத்தும் விஜயரட்ணம் பிரபன் தெரிவித்ததாவது:

எனது தந்தையாரின் ஞாபகார்த்தமாகவே இந்தத் தொடரை நடத்துகின்றேன். மின்னொளியில் யாழப்பாணத்தில் முதல் முதலாக நடத்த தீர்மானித்துள்ளோம்.

தினமும் மாலை 5.30 மணிக்கு ஒரு போட்டியும் இரவு 8.30 மணிக்கு ஒரு போட்டியும் என இரண்டு போட்டிகள் நடத்தப்படும். இந்தத் தொடரில் சென்ரல் விளையாட்டுக் கழகம் , கே.சி.சி.சி. விளையாட்டு கழகம், பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழகம், ஜொலிஸ்டார் விளையாட்டு கழகம் , திருநெல்வேலி மத்திய விளையாட்டுக் கழகம், சென்றலைட்ஸ் விளையாட்டு கழகம், ஏபி விளையாட்டுக் கழகம் மற்றும் கிறாஸ்கோப்பர் விளையாட்டு கழகம் என்பன மோதவுள்ளன.

முதல் நாள் சுற்றுப் போட்டியில் ஏபி விளையாட்டு கழகமும் சென்றலைட்ஸ் விளையாட்டு கழகமும் மோதவுள்ளன. புற்தரை மைதான வசதிகள் ஏற்படுத்தி தர வேண்டும். அதேவேளை யாழ்ப்பாணத்தில் புற்தரை (ரேவ்) மைதான வசதிகள் இல்லை. இந்த போட்டிகளை புற்தரையில் நடத்தவே எமக்கு விருப்பம். ஆனால் யாழ்ப்பாணத்தில் அதற்கான வசதிகள் இல்லை. பாடசாலை மட்டங்களில் விளையாடும் திறமையான வீரர்கள் யாழ்ப்பாணத்தில் சாக்கில் (மற்றிங்) விளையாடி பழகி வெளியே கொழும்பு உள்ளிட்ட பிரதேசங்களுக்கு சென்று புற்தரையில் விளையாடும் போது பல சவால்களை எதிர்நோக்குகின்றார்கள். அதனால் அவர்கள் தமது திறமைகளை அங்கே வெளிப்படுத்த முடியவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து தேசிய அணிக்கு செல்ல கூடிய அளவுக்கு சிறந்த வீரர்கள் இருக்கின்றார்கள். தேசிய அணிக்கு இல்லாவிடினும் ஏ , சி அணிக்காவது விளையாடும் அளவுக்கு வீரர்கள் உள்ளனர். அவர்கள்




இங்கே மற்றிங்ல விளையாடி பழகி புற்தரையில் விளையாட முடியாது தடுமாறுகின்றார்கள். எனவே யாழ்ப்பாணத்தில் புற்தரை மைதானங்களை உருவாக்க உரிய தரப்புகள் முயற்சிகளை மேற்கொண்டு எமது துடுப்பாட்ட வீரர்களின் திறமைகளை வளர்த்து தேசிய அளவில் அவர்களை பிரகாசிக்க செய்ய வேண்டும் எனக் கோருகிறேன் – என்றார்.

(ஐ - 07)

## மருதங்கேணி பிரதேச செயலகம் மெய்வன்மை: வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிய சக்திவேல்!





யாழ்ப்பாணம் , மார்ச் 30

மருதங்கேணி பிரதேச செயலகம் நடத்திய மெய்வன்மை - 2019 இறுதி போட்டிகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

இந்தப் போட்டியின் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதி ஆட்டத்தில் கொடுக்குழாய் சக்திவேல் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் மணற்காடு சென் அன்ரனிஸ் அணியுடன் கொடுக்குழாய் சக்திவேல் அணி மோதியது. விறுவிறுப்பான இந்த ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

இதனையடுத்து தண்டனை உதை மூலம் 5 - 4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கொடுக்குழாய் சக்திவேல் அணி வெற்றிக் கோப்பையை தனதாக்கியது.

(ஐ - 07)

## பெங்களூர் அணியை வீழ்த்தியது மும்பை!

ஐ.பி.எல். ரி - 20 தொடரின் ஏழாவது லீக் போட்டியில், மும்பை இந்தியன்ஸ் அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

பெங்களூர் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், மும்பை இந்தியன்ஸ் அணியும், றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 187 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக ரோஹித் சர்மா 48 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

பந்து வீச்சில் அதிகபட்சமாக யுஸ்வேந்திர சஹால் 4 விக்கெட்டுகளையும், மொஹமட் சிராஜ் மற்றும் உமேஷ் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 188 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 181 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இதனால் மும்பை இந்தியன்ஸ் அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக ஏபி டிவில்லியர்ஸ் 70 ஓட்டங்களையும், விராட் கோஹ்லி 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் அதிகபட்சமாக ஜஸ்பிரிட் பும்ரா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

### இன்றைய ஐ.பி.எல் ஆட்டங்கள்



## சரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரச மற்றும் எதிர்த் தரப்பினர்கள் இந்த நாட்டில் விசாரணைகளை நடாத்தப் போவதில்லை என்று கூறுகின்றனர். அதேநேரம் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தன்னிடம் யுத்தக் குற்ற ஆதாரங்கள் உள்ளன என்றும் விசாரணைகளை நடத்தப்பட வேண்டுமென்றும் கூறுகின்றார்.

ஆனாலும் போர்க்குற்றம் என்ற கோணத்தில் விசாரணைகளை நடத்த பொன்சேகா தயாராக இருக்கின்றாரா என்ற கேள்வி எழுகின்றது. ஏனெனில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்தவரே அவர்தான். ஆகையால் அவ்வாறான தொரு விசாரணைகளுக்கு அவர் ஒருபோதும் ஒத்துழைக்கப் போவதில்லை.

ஆனாலும் அந்தப் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டால் சரத் பொன்சேகாவும் குற்றவாளியாகத் தண்டிக்கப்படுவார். ஆக அவரும் உண்மையில் அத்தகைய விசாரணைகளைக் கோரவோ அல்லது அதற்கு ஒத்துழைக்கவோ போவதில்லை. ஆனாலும் அவர் தன்னை பரிசுத்தமானவராகக் காட்டுவதற்கு முனைகின்றார் – என்றார். (ஐ)

## மின்சாரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சு மற்றும் மின்வலு, வலுசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று இடம்பெற்றது.

இந்தக் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆட்சியாளர்களை நம்பி வாக்களித்த மக்களை அரசு இருட்டில் தள்ளிவிட்டது. கெரவலப்பிட்டிய மின் நிலையத்தைச் சீனாவுக்கு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

ஏற்கனவே இதனை கைவிட வேண்டும் என நீதிமன்றம் கூறியுள்ள நிலையிலும், இவ்வாறு சீனாவுக்குக் கொடுத்தால் இலங்கைக்கு 900 கோடி ரூபா நஷ்டமாகும் எனக் கூறியும் அதனைக் கருத்தில் கொள்ளாது சீனாவுக்கு வழங்கவிலைமனுக் கோரல் விடுக்கப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

## தனியாரிடமிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன இதனைத் தெரிவித்தார்.

இதற்கமைய மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் நிறைவடைந்து, மின் கட்டமைப்பிலிருந்து அகற்றப்பட்ட மாத்தறை மற்றும் சப்புகஸ்கந்த பகுதிகளிலுள்ள இரண்டு மின் நிலையங்களிலிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்கீழ், 75 மெகாவாட் மின்சாரம் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

## இராணுவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராம விகாரையில் நடைபெற்றது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் தலைமை சங்கநாயக்க தேரரும், வவுனியா சிறி போதித்கசினராமாய விகாரதிபதி சங்கைக்குரிய சியம்பலாக்ஸ்வெவ விமலசார நாயக்க தேரர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு புத்தசாசன அமைச்சின் ஒத்துழைப்புடன், வடக்கு மாகாண பௌத்த சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சமய நல்லிணக்கத்தையும், இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் ஏற்படுத்தும் நடவடிக்கையாக இது நடைபெற்றது.

நிகழ்வில் அதிதிகள் இந்து, பௌத்த மற்றும் முஸ்லிம் கலாசார நடனங்களுடன் அழைத்து வரப்பட்டதுடன், மத அனுஸ்டானங்களுடன் பௌத்த தேரர்கள் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டுச் சர்வமதப் பெரியார்களின் ஆசிச் செய்தியுடன் பௌத்த மாநாடு ஆரம்பமாகியது.

இதன்போது வடமாகாணத்தில் பௌத்த மதம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் இன, மத நல்லிணக்கம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மாநாட்டை முன்னிட்டு அந்த விகாரை அமைந்துள்ள பகுதிகளையண்டிய கற்குழி, கண்டிவீதி, தேக்கவத்தை ஆகிய பகுதிகளில் வீதிகளில் இராணுவத்தினர் அதிகாலையில் இருந்தே குவிக்கப்பட்டு பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தது.

புத்த சாசன அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாணத்தின் அனைத்து பௌத்த வணக்கஸ்தலங்களின் நாயக்க தேரர்கள், வணிகத்துறைப் பிரதி அமைச்சர் புத்திக்க பத்திரண, வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வன்னி இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா, வட மாகாண கடற்படை மற்றும் விமானப்படை கட்டளைத் தளபதிகள், வன்னி பிரதி பொலிஸ் மா அதிபர், வவுனியா மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-100)

## குற்றச்சாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என ஆஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான ஆஸ்திரேலியப் பதில் தூதுவர் ஜோன் பிலீப் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் போர் முடிந்த 10 ஆண்டுகள் ஆகின்றன. தற்போது இலங்கை எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டும்.

இலங்கை மீது மனித உரிமைகள் கவுன்ஸிலில் மிகவும் கடுமையான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதை நாம் அறிவோம். இதனை இலங்கை தீவிரமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை தொடர்பாக கடந்த வாரம் மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஆஸ்திரேலியாவும் இணை அனுசரனை வழங்கியுள்ளது.

இலங்கை அவற்றைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். போரின்போது இரு தரப்பினரும் இழைத்த குற்றங்கள் தொடர்பாக ஆராயப்பட வேண்டும். இலங்கையுடன் இணைந்து பயணிக்க ஆஸ்திரேலியா எதிர்பார்க்கின்றது – என்றார். (ஐ)

## கடும் வெயிலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மயங்கி வீழ்ந்து மரணமானார்.

தல்லையப்புலம், கரவெட்டியைச் சேர்ந்த கார்த்திகேசு இராசதுரை (வயது – 67) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

நேற்றுப் பிற்பகல் உறவினர் வீடு ஒன்றுக்குச் சென்று விட்டு வீடு திரும்பும் வழியில் தல்லையப்புலம் பகுதியில் பிரதான வீதியில் இருந்து ஒழுங்கை ஒன்றின் இறக்கத்துக்குள் இறங்க முற்பட்ட போது மோட்டார் சைக்கிளுடன் மயங்கி வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து அவரை அயலில் உள்ளவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ஐ-07)

## பந்துல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலகவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் குழு, 2019ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத்திட்டத்துக்காக தமது அறிக்கையை உரிய திகதியில் சமர்ப்பிக்கவில்லை.

எனவே இந்தக் குழு பிரயோசனமற்றது என்று பந்துல குணவர்த்தன குற்றம் சுமத்தியிருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த சுமந்திரன், குழுவின் அறிக்கை உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படாமைக்கு நிதியமைச்சு உரிய திகதியில் சில தரவுகளைத் தராமையே காரணம்.

இந்நிலையில் குழு பிரயோசனமற்றது என்று பந்துல கருதினால் அவர் அதில் இருந்து விலகிக் கொள்ளலாம்.

இந்தக்குழுவின் ஒரு கூட்டத்துக்காவது பந்துல குணவர்த்தன சமுகமளிக்கவில்லை – என்றார். (ஐ)

## நிதி ஒதுக்கீடுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலும் அமைச்சுக்களின் நடவடிக்கைகளில் எந்தவித பாதிப்பும் ஏற்பட மாட்டதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, வஜித அபேவர்த்தன ஆகியோரின் கீழ் உள்ள அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் குழுநிலை வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டன.

இதுகுறித்து நேற்றுச் சபையில் கருத்து வெளியிட்ட பிரதமர்,

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருக்காததன் காரணமாகவே அமைச்சர்களான பாட்லி சம்பிக்க ரணவக்க , வஜிர அபேவர்த்தன ஆகியோரின் அமைச்சுக்களுக்கான வரவு – செலவுத் திட்டக் குழு நிலை ஒதுக்கீடு சபையில் தோல்வி அடைந்தது.

இந்த அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் திருத்தங்களுடன் மீண்டும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இதை பெரிய பிரச்சினையாக கருத வேண்டியதில்லை – என்றார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட சபை முதல்வரான கிரியல்ல,

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சுக்கும், பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கும் அடுத்த மாதம் 30ஆம் திகதி வரை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனால், அமைச்சுக்களின் நடவடிக்கைகளில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது. என்றார். (ஐ)

## மாகாண சபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் 37 பேருக்கு நிலுவைக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் காலப்பகுதி குறித்த அறிவிப்பை விடுத்தார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் அது ஒத்திவைக்கப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருக்கின்றார். நானும் அதையே வலியுறுத்தி வருகின்றேன். இது குறித்து பிரதமருடனும் பேச்சு நடத்தப்பட்டது.

எனினும், தேர்தலை நடத்துவதற்காக இயற்றப்பட – திருத்தப்படவேண்டிய சட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல் காரணமாகவே காலம் தேவைப்படுகின்றது. எனினும், விரைவில் தேர்தல் நடத்தப்படும் எனக் கூறப்பட்டது.

எது எப்படியிருப்பினும், எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது – என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டமையை அடுத்து அது தொடர்பாக விளக்கமளிப்பதற்காக எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளியின்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு வடக்கு ஆளுநர் சுரேன் ராகவனுக்கு நோட்டீஸ் பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

கிளிநொச்சி நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா இந்த உத்தரவை வழங்கினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்ற நடமாடும் சேவை அமர்வில் பங்குபற்றிய அதிகாரிகளுக்கு கிளிநொச்சி கண்டி வீதியில் உள்ள ஒரு உணவகத்திலிருந்து சாப்பாட்டு பரர்ஸல்கள் வழங்கப்பட்டன என்று கூறப்படுகின்றது.

அந்தப் பார்ஸலில் ஒன்றில் புழு இருந்ததாக அதிகாரிகளினால் குற்றம் சுமத்தப்பட்டமையை அடுத்து, அந்த உணவகத்துக்கு எதிராக உணவுச் சட்டத்தின் கீழ் சுகாதாரப் பரிசோதகரினால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அன்று மாலையே அந்த உணவக முகாமையாளர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். உடனடியாக உணவகத்தை மூடி, அதனை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க உத்தரவிட்ட நீதிவான், உணவக முகாமையாளரையும் ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார்.

இந்த நிலையில் பின்னர் அந்த உணவகத்துக்கு ஆளுநரின் வழிப்படுத்தலில் பொலிஸார் சென்றனர் என்றும் –

பின்பு இரவு 8 மணியளவில் ஆளுநரே நேரில் அந்த உணவகத்துக்குச் சென்று அங்கு கடும்போக்கில் நடந்து கொண்டார் என்றும் –

நேற்று இந்த விவகாரம் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேற்படி நிறுவனத்தின் சார்பில் மன்றில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா நீதிமன்றில் முறைப்பாடு செய்தார்.

நீதிமன்றில் விசாரணையில் இருக்கும் – நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கும் – ஒரு விடயத்தை ஆளுநர் போன்ற பதவியில் இருக்கும் அதிகாரிகள் தமது கைகளுக்கு எடுத்து அதிகாரப் போக்கில் கையாள்வது நீதிமன்றின் செயற்பாட்டை அவமதிக்கும் நடவடிக்கையாகும்." – என்றும் அவர் முறையிட்டார்.

இதனை அடுத்து எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு ஆளுநருக்கு அறிவித்தல் வழங்க நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட உணவகத்தின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, சட்டத்தரணிகள் திருமதி எஸ்.விஜயராணி, ரி.அர்ஜுனா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

முறைப்பாட்டாளர்கள் தரப்பில் சுகாதாரப் பரிசோதகர்கள் ரி.நிஷாந்தன் மற்றும் எஸ். திவாகரன் ஆகியோர் முன்னிலையாகினார். (உ)

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய கோட்டாபய ராஜபக்ஷ இந்த நாட்டின் ஜனாதிபதியானால் தமிழ் மக்களுக்கு ஆபத்து.

– இவ்வாறு எச்சரிக்கின்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

இழைக்கப்பட்ட கொடூரங்களுக்குத் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டிய கோட்டாபய உள்ளிட்ட குற்றவாளிகளைப் பாதுகாத்ததே கூட்டமைப்பு தான். ஆகையால் ஏற்படப்போகும் ஆபத்தக்களுக்கு கூட்டமைப்பினரே பொறுப்பேற்கவேண்டுமென்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் பாதுகாப்புச் செயலாளராக கோட்டாபய இருந்த காலத்தில் தான் தமிழ் மக்கள் ஈவிரக்கமின்றிச் சித்திரவதை செய்து உயிரோடு எரித்தும் கொல்லப்பட்டிருக்கின்றனர். அவரது நேரடி வழிகாட்டலிலேயே அத்தனை கொடூரங்களும் துன்பங்களும் நடந்துள்ளன.

தமிழ் மக்களுக்கு எதிராக அத்தனை கொடூரங்களையும் முன்னின்று வழிப்படுத்தியவரே அவர்தான். ஆக அவர் மீண்டும் பதவிக்கு வந்தால் இன்னும் பலதையும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்யக் கூடிய ஆபத்துக்கள் இருக்கின்றன. ஆகவே மொத்தத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக அவர் வந்தால் தமிழ் மக்களுக்கு நிச்சயமாக ஆபத்துதான்.

அந்த ஆபத்தைத் தடுக்க நிரந்தரமான வேலைகளைச் செய்ய தவறியிருக்கின்றனர். அதாவது அவரது தலைமையிலும் வழிகாட்டலிலும் இழைக்கப்பட்ட குற்றங்கள், அநீதிகள், கொடுமைகளுக்கு எதிராகச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு சென்று விசாரணைகள் நடைபெற்றிருந்தால் அவர் இன்று தண்டிக்கப்பட்டிருப்பார்.

ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற கூட்டமைப்பினர் அதனைச் செய்யவில்லை. அவரைத் தூக்குமேடைக்குக் கொண்டு செல்வதையே தடுத்து கூட்டமைப்பினரே அவரைப் பாதுகாத்துள்ளனர்.

இவ்வாறு அவரைப் பாதுகாத்து பலப்படுத்தியிருப்பது சம்பந்தன் – சுமந்திரன் தலைமையிலான கூட்டமைப்பு குழுதான். ஆக இந்த ஆபத்துக்களை விளங்கிக்கொண்டு யுத்தங்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட அவர்கள் தண்டிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளைச் செய்திருக்க வேண்டும் – என்றார். (ஐ-07)

காலைக்கதிர்
Kalaikathir



## மன்னார் தமிழ்ப் பகுதிகளில் அமைச்சர் ரிஷாத் வேண்டாம்

### பிரதமரிடம் கூட்டமைப்பு போர்க்கொடி

கொழும்பு, மார்ச் 30

மன்னார் மாவட்டத்தின் தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளை அமைச்சர்ரிஷாத்பதியுதீன்செய்யக்கூடாதென்ற பணிப்புரையை விடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அப்படிபிரதமர்பணிப்புரைவிடுக்காத பட்சத்தில் வரவு – செலவுத் திட்டத்தின் இறுதிவாக்கெடுப்பில்அரசுக்குஆதரவாக வாக்களிப்பது குறித்து மீள்பரிசீலனை செய்யவேண்டிவருமெனவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சிலதினங்களுக்குமுன்னர்நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இந்த நிலைப்பாட்டைவலியுறுத்தித்தெரிவித்துள்ளார்.

அரச அபிவிருத்தித் திட்டங்களை தமிழ்ப் பிரதேசங்களில் செய்வதன் மூலம் தமிழ் வாக்குகளை அமைச்சர் ரிஷாத் ஈர்க்க முயல்கிறார் என்றும், முஸ்லிம் வாக்குகளுடன் தமிழரின் வாக்குகளும் பிரிவதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் நிர்மலநாதன் எம்.பி. பிரதமரிடம் எடுத்துரைத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. (ஐ)

## ஜனாதிபதி வேட்பாளர் யார்?

# ஐ.தே.கவுக்குள் எழுந்த மும்முனைப் போட்டி!

கொழும்பு, மார்ச் 30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக யார் நியமிக்கப்படுவர் என்ற விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மும்முனைப் போட்டியொன்று ஆரம்பமாகியுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக அடுத்த தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ள பிரதமர் ரணில் அதற்கான பிரசாரச் செயற்பாடுகளை கடந்த வாரம் முதல் ஆரம்பித்துள்ளார்.

ரணிலை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவதில் கட்சியின் செயலாளர் அகில விராஜ் காரியவசம், மலிக் சமரவிக்ரம,சாகல ரத்நாயக்க,சரத் பொன்சேகா ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர்.

அதேவேளை, சபாநாயகர் கரு ஜயசூரியவை ஜனாதிபதி வேட்பாளராக கொண்டுவருவதில்நவீன் திசாநாயக்க,சம்பிக்க ரணவக்க உட்பட்ட பலர் நகர்வுகளை கொண்டு வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய முகம் ஒன்றை இறக்கினால்வெற்றிபெற முடியும் என்பது இவர்களின் கருத்தாக இருக்கிறது.



அதேசமயம் கடந்த கால அரசியல் நெருக்கடியில் மிகவும் பொறுமையாக – சாதுரியமாகச் செயற்பட்டதால் உலக நாடுகளின் குறிப்பாக இந்தியாவின் ஆதரவு கருவுக்கு இருப்பதாக கருதப்படுவதால் அதனை வைத்துக் கருவை எழுச்சி பெறச் செய்யலாமென்பது இவர்களின் கருத்தாக இருக்கிறது.

இதற்கிடையில் சஜித் பிரேமதாஸவுக்கு சாசன தீபன அபிமானி ஸ்ரீ லங்கா ஜனரஞ்சன விருதை மல்வத்து மாநாயக்க பீடம் வழங்கவுள்ள நிகழ்வு நாளை 31 ஆம் திகதி மல்வத்து மகா விகாரையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி மைத்திரியை பிரதம அதிதியாக சஜித் அழைத்துள்ளமை ரணிலுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதேசமயம் ஆளுங்கட்சியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரையும் இதற்கு அழைத்துள்ளமையால் ஜனாதிபதித் தேர்தலுக்கான தயாரிப்பாகவே சஜித் இதனைச் செய்கிறார் எனக் கரு துகிறார் ரணில்.

முன்னதாகக்கடந்தவாரம் இப்படியான விருதைச் சபாநாயகர் கரு ஜயசூரிய கண்டியில் பெற்றிருந்தபோதும் இப்படியான நிகழ்வுகள் எதனையும் அவர் செய்யவில்லையென்பது குறிப்பிடத்தக்க தக்கது

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்துள்ள இந்த மும்முனைப் போட்டியால் உட்கட்சிப் பூசல்களும் உருவாக ஆரம்பித்துள்ளன எனச் சொல்லப்படுகிறது. (ஐ)

# அரச குழு ஜெனீவா சென்ற செலவு மட்டும் ரூ. 2 கோடி!

கொழும்பு, மார்ச் 30

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் அமர்வுகளில் பங்கேற்பதற்காக ஜெனீவாவுக்கு விஜயம் செய்த அரச பிரதிநிதிகளுக்காக 2 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரதிநிதிகள் மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு எதிரில் அமைந்துள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைப் பிரதிநிதிகளுக்கான தங்குமிட வசதிகளை ஜெனீவாவுக்கான இலங்கைத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

ஜெனீவாவுக்கு விஜயம் செய்திருந்த இலங்கைப் பிரதிநிதிகளுக்கு விசேட கொடுப்பனவு தொகையொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

ஜெனீவா விஜயத்தின் பின்னர் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு பெரும் பொருட் செலவில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் விருந்துபசாரம் ஒன்றும் நடைபெற்றுள்ளது. (ஐ)


சிவமயம்

தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியம்

அங்குரார்ப்பண வைபவ அழைப்பு

எமது தாயகம் நம்பிக்கை நிதியத்தின்
அங்குரார்ப்பண வைபவ விழா

31.03.2019 ஞாயிற்றுக்கிழமை, பி.ப 4.00 மணிக்கு

பெருமாள் கோவில்
"ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் மண்டபத்தில்"

நிகழவிருப்பதால் இவ் வைபவத்தில்
கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதம விருந்தினர்
திரு.நா.வேதநாயகன் அவர்கள்
(யாழ்/அரசாங்க அதிபர்)

அன்று பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வும், 22 பயனாளிகளுக்கு கோதான நிகழ்வும் இடம் பெறும் என்பதனையும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நன்றி

செ.வீ.சிறிதரன்
(தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியம் சார்பில்)



பாராட்டி வாழ்த்துகின்றேன்



ரமேஸ் ஜெனார்த்தனன்
(கொக்குவில் இந்துக் கல்லூரி)

கடந்த சாதாரண தரப் பரீட்சையில் 6A, 2B சித்தி பெற்று எமது கொக்குவில், மண்ணுக்கு பெருமை சேர்த்த செல்வன் ஜெனார்த்தனன் கல்வியில் மேலும் பல சாதனைகள் படைத்து மண்ணில் நல்ல வண்ணம் திகழ் எல்லாம் வல்ல ஸ்ரீ சாயி துர்க்கை அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாராட்டுபவர்
கு.கபில்